# காணிகளின் விலையை குறைக்க சட்டம் வருகிறது


Registered as a News Paper in Ceylon   விலை சதம் 15 ★★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 212
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆவணி 26 றஜபு 9 வெள்ளிக்கிழமை (11-9-70)



**ஈழநாடு சந்தா**

| | தினப்பதிப்பு | வாரப் பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 18-00 | ரூ. 4-00 |
| 6 மாதம் | ரூ. 34-00 | ரூ. 7-50 |
| வருடம் | ரூ. 66-00 | ரூ. 14-00 |

முற் பணம் கட்டவேண்டும்.
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.


## ஆட்சிமன்றத்தில் பீட்டர்கெனமன் தகவல்

• கொழும்பு, வியா. இலங்கை பூராவுமுள்ள காணிகளின் விலையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கான சட்ட மூலம் ஒன்று விரைவில் ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த தகவலை வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் இன்று தெரிவித்தார். இதுமுதலில் கொழும்பில் அமுல் செய்யப்படும் என்று அவர் சொன்னார்.

வீட்டுச் சொந்தக்காரர்கள் வாடகைக்கு குடியிருப்பவர்களின் குடியிருப்பில் தலையிட முடியாதவாறும் அவர்கள் நடாத்திவரும்பய முறுத்தல், பலாத்காரம் போன்றவற்றை தடைசெய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

திரு. கெனமன் மேலும் பேசியதாவது:- 10 லட்சம் மக்கள் வீட்டுவசதியின்றிக் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்குஉதவிசெய்வதற்காக நடவடிக்கைகளின் முன்னோடியாக கட்டிடப்பொருள்களின் விலைகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வீடின்றிக்கஷ்டப்படுபவர்களின் பிரச்னையை போக்கு முகமாகவே காணிகளின் விலையைக் குறைக்கவிருப்பதாக அமைச்சர்சொன்னார்,

ஆட்சிமன்றத் தலைவராக திரு. மைத்திரிபாலசேனநாயகா நியமிக்கப்பட்டதை எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஜே ஆர் ஜெயவர்த்தனவும் திரு எஸ் ஜே வி செல்வநாயகமும் பாராட்டிப்பேசினர்

சபை இன்று மீண்டும் கூடும்

## உழைப்பவர்கள் அனைவருக்கும் வருமானவரி!

உழைப்பவர்கள் அனைவரும் அடுத்த ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து வருமானவரி செலுத்தும் திட்டம் ஒன்று அமுலுக்கு வரவிருக்கிறது. இத்தகவலை நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா இன்று ஆட்சிமன்றத்தில் வெளியிட்டார்.

தற்போது 2 லட்சத்து 15 ஆயிரம் பேர் வருமானவரி செலுத்துகிறார்கள் இவர்களில் 1 லட்சத்து 35 ஆயிரம் பேர் அரசாங்கத்திலும் தனியார் துறையிலும் கடமையாற்றுபவர்கள். கடந்த நிதி ஆண்டில் செப்டம்பர் மாதம்வரை வருமானவரியாக்க் கிடைக்கப்பெற்ற தொகை 34 கோடியே 30 லட்சம் ரூபாவாகும். ஆனால் இவ்வருடம் 11 மாத காலத்தில் 36 கோடியே 50 லட்சம் ரூபா வருமானமாகக் கிடைத்துள்ளது என்றும் டாக்டர் என். எம். தெரிவித்தார்.

இடைக்கால வரவு செலவுத் திட்ட அறிக்கையைச் சமர்ப்பித்து அமைச்சர் பேசினார். வருகிற 3 மாத காலத்திற்கு 174 கோடியே 14 லட்சத்து 670 ரூபா தேவைப்படுவதாவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# பிரதமர் சிறிமா தலைமையில் நடந்த லுசாக்கா மகாநாடு

## நவம்பர் முதல் வெளிநாட்டு சேவையில் மாற்றம்

கோட்டை, வியாழன் நவம்பர்மாதம் தொடக்கம் வெளிவிவகார அமைச்சு புதிய முறையில் மாற்றியமைக்கப்படவுள்ளது. பொருளாதார விவகாரங்களில் விசேஷ ஆலோசனைகள் பெறவும் ஆபிரிக்க ஆசிய நாடுகளோடு தொடர்பு கொள்ளவும் தக்கவகையில் அமைச்சு மாற்றியமைக்கப்படவிருக்கிறது.

இலங்கையின் சில பிரதேசங்களைப்பற்றி நன்கு அறிந்த வெளிநாட்டு அதிகாரிகள் பலர் மேற்படி அமைச்சில் நியமிக்கப்படவுள்ளார்கள். ஆசியா அமெரிக்கா ஐரோப்பா, மத்திய கிழக்கு ஆகிய நாடுகளின் அதிகாரிகள் இங்கு இடம்பெறுவர்

இதற்கான நடவடிக்கைகளை எடுப்பதில் அமைச்சு தற்போது ஈடுபட்டுள்ளது. புதிய அமைப்பின்கீழ்வெளிவிவகார மா அதிபரின்கீழ் 3 அதிபர்கள் கடமையாற்றுவார்கள், இவர்கள்ஆபிரிக்க ஆசிய மேற்கத்திய நாடுகளின் தொடர்புகளை கவனிப்பதோடு பொருளாதார விவகாரங்களையும் கவனிப்பார்கள். உதவி அதிபர்களும் புதிதாக நியமிக்கப்படுவார்கள்.

## திறமையாக நிர்வகித்தார்; பிரதிநிதிகள் பாராட்டு

லூசாக்கா, செப் 10 பிரதமமந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா லூசாக்காவில் நடைபெறும் கூட்டுச்சேராநாடுகளின் மகாநாட்டுக்கு தலைமை தாங்கினார்.

நேற்று பிற்பகல் நடந்த மாநாட்டின் நிகழ்ச்சிகளுக்கே திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமை வகித்தார். சுமார் மூன்று மணி நேரம் திருமதி பண்டாரநாயக்க தலைமை வகித்தார்.

திருமதி பண்டாரநா...



ஒரு ம... திரு... சர் ஒரு முடிக்குரிய இள... 14 ...

3 துணை ஜனாதிபதிகள், 9 பிரதமர்கள் மற்றும் அரசாங்கத் தலைவர்களும் கலந்து கொள்கிறார்கள்

நேற்றைய கூட்டத்தில் சிங்கப்பூர் பிரதமர் திரு லிகுவான்யுவின் சொற்பொழிவு பிரதானமாக அமைந்தது.

கூட்டுச்சேரா நாடுகளின் நடவடிக்கைகளின் காரணமாக வல்லரசு நாடுகளின் போக்கில் மாற்றம் ஏற்பட்டிருப்பதாக திரு. லீ ...றினார். கூட்டுச்சேரா நாடுகளுக்கிடையில் பொருளாதார ஒத்துழைப்பு மேலும் ...பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

மட்டுவில் கி. ச.

## போட்டியின்றித் தெரிவு

மட்டுவில், வெள்ளி

மட்டுவில் கிராமசபை 4-ம் வட்டார இடைத் தேர்தலில் தமிழ்க்காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. கே. இராஜரத்தினம் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்.

இன்றுகாலை அபேட்சகர் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட போது தமிழரசுக் கட்சி ஆதரவில் போட்டியிடவிருந்த திரு. கே. பொன்னுத்துரையின் அபேட்சகர் பத்திரத்தில் ஏற்பட்ட பிழை காரணமாக, அவரது நியமனப்பத்திரம் நிராகரிக்...

## துறைமுக அபிவிருத்தி நிறுத்தப்பட்டதேன்?

### உடுவில் எம். பி.யின் கேள்வி

யாழ்ப்பாணம், வியாழன் வடபகுதி பொருளாதார அபிவிருத்திக்குக் காரணமாக இருக்கும். காங்கேசன் துறை துறைமுகம், மயிலிட்டி மீன்பிடித் துறைமுகம் ஆகியவை தொடர்ந்தும் அபிவிருத்தி செய்யப்படாமல் இருப்பது பற்றி ஆட்சிமன்றத்தில் உடுவில் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் கேட்கவிருக்கிறார்.

முன்னைய அரசாங்கத்தால் அபிவிருத்தி செய்யப்பட்ட இவ்விரு துறைமுகங்களின் அபிவிருத்தி வேலைகளை சோஷலிச அரசாங்கமெனக் கூறுகின்ற இவ்வரசாங்கம் தொடர்ந்தும் அபிவிருத்தி செய்யாமல் இருப்பது தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதி மட்டுமல்ல மக்களை ஏமாற்றுவதுமாகும். இதனால் மக்கள், அரசின் மீது நம்பிக்கை இழந்துவிடுவார்கள் என அவர் கூறினார்.

## இந்தப் பரீட்சை முடிவும் தாமதமாவது ஏன்?

அரசியல் அமைப்புச் சட்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில் நியமிக்கப்பட்டுள்ளார் கள். ஆசியா அமெரிக்கா

படுவார்கள்.

பண்டாரநாயக்கா தலைமை வகித்தார். சுமார் மூன்று மணி நேரம் திருமதி பண்டாரநாயக்க தலைமை வகித்தார்.

திருமதி பண்டாரநாயக்கா திறமையாக சபை நடவடிக்கைகளை நிர்வகித்தது பற்றி மகா நாட்டில் கலந்து கொண்ட ஆபிரிக்க, ஆசிய, லத்தீன் அமெரிக்கா நாடுகளின் பிரதிநிதிகள் பாராட்டினார்கள்.

லூசாக்காவில் நடைபெறும் கூட்டுச்சேரா நாடுகளின் மூன்றாவது மகாநாட்டிற்கு துணைத் தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களில் பிரதம மந்திரி திருமதி பண்டாரநாயக்காவும் ஒருவர். இந்த மகாநாட்டில் சுமார் 60 நாடுகள் வரை கலந்துகொள்கின்றன. ஒரு சக்கரவர்த்தி, ஒரு மன்னர், ஒரு இளவரசர், ஒரு முடிக்குரிய இளவரசர், 14 ஜனாதிபதிகள்.



டிருப்பதாக திரு. ... னர். கூட்டுச்சேரா நாடுகளுக்கிடையில் பொருளாதார ஒத்துழைப்பு மேலும் பலப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினர்.

## அரசியல் அமைப்புச் சட்டம்

# தமிழில் அறிக்கை சமர்ப்பிக்க வெட்கம்?

கோட்டை, வியாழன்

புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்குவதற்கான கருத்துக்களையும் யோசனைகளையும் தெரிவிக்கும்படி விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு தமிழர்கள் போதிய அக்கறை காட்டவில்லையென்று தெரிகின்றது

இதுவரை சுமார் 300 அறிக்கைகளை அரசியல் அமைப்பு அமைச்சு பொதுமக்களிடமிருந்து பெற்றிருக்கின்றது. இவைகளில் பெரும்பாலானவை சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் கிடைத்துள்ளன. ஆனால் தமிழர்களிடமிருந்து மூன்றுக்குப் குறைவான அறிக்கைகளே கிடைத்துள்ளனவாம்.

## சகலநாட்டுப் பிரதிநிதிகளும்

# பிரசித்தியான இடங்களுக்கு விஜயம்செய்ய ஏற்பாடு

ஸாம்பியா நாட்டில் பிரசித்தி பெற்ற இடங்களுக்கு விஜயம் செய்வதற்கு லுசாக்கா மாநாட்டில் கலந்து கொண்ட சகல நாட்டுப் பிரதிநிதிகளுக்கும் வசதி செய்து கொடுப்பதற்கு ஸாம்பியா அரசாங்கம் ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளது.

மாநாடு இன்றுடன் முடிவடைகிறது. கடைசிநாள் நிகழ்ச்சிகளுக்கு யூகோஸ்லாவிய ஜனாதிபதி திரு டிட்டோ தலைமைவகித்தார்

மாநாட்டில் முக்கியமாக வலியுறுத்தப்பட்ட சமாதானம், சம அந்தஸ்து சகல மக்களையும் சமமாகப் பேணல், சர்வபிராந்திய ஒத்துழைப்பு போன்ற சாஸனங்கள் மாநாட்டு இறுதியில் நிறைவேற்றப்படவிருந்தன. மாநாட்டில் இடம் பெற்றபேச்சுவார்த்தையின் அடிப்படையில் இணக்கம் காணப்பட்டது.

சர்வபிராந்திய தொழில்நுட்ப உதவிபற்றி இலங்கைக்குழு வற்புறுத்தியது இலங்கைக்குழு 13-ந் திகதி பாரிஸ் செல்கிறது.

# பிரசவத்துக்கு சென்ற பெண்ணை பாம்பு தீண்டியது

யாழ்ப்பாணம், வெள்ளி

அம்பனை ஆஸ்பத்திரியில் பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்ட நாகர் கோயில் குடாரப்பு என்ற இடத்தைச் சேர்ந்த திருமதி பிரான்சிஸ் சிசிலியா என்ற பெண், தமக்கு ஒதுக்கப்பட்ட படுக்கையைத் தட்டி விரிக்கும் போது அவரது கைவிரலில் பாம்பு கடித்ததாகக் கூச்சலிட்டார். ஆஸ்பத்திரி ஊழியர்கள் அந்தப் பெண்ணை யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்ததுடன் கடித்த பாம்பையும் போத்தலில் அடைத்து பரிசோதனைக்காக அனுப்பி வைத்தார்களாம்.

## சன்மானம் அதிகரிப்பு

சென்னை, செப். 10

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளைக்கு மாதம் 250 ரூபா சன்மானம் வழங்க தமிழ்நாடு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

முன்னாள் தமிழ்நாடு ஆஸ்தான கவிஞரான இராமலிங்கம்பிள்ளைக்கு இதுவரை மாதம் 200 ரூபா வழங்கி வந்தது.

250 ரூபாவாக சன்மானத்தை அதிகரித்திருப்பதாக முதலமைச்சர் கருணாநிதி சட்டசபையில் இன்று தெரிவித்தார்.

யப்பட்ட போது தமிழரசுக் கட்சி ஆதரவில் போட்டியிடவிருந்த திரு. கே. பொன்னுத்துரையின் அபேட்சகர் பத்திரத்தில் ஏற்பட்ட பிழை காரணமாக, அவரது நியமனப்பத்திரம் நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து திரு. இராஜரத்தினம் தெரிவு செய்யப்பட்டார்.

முன்னைய அங்கத்தவர் தொடர்ந்து சில மாதங்கள் சபைக் கூட்டத்துக்கு சமூகமளிக்கத் தவறியதால் அவர் பதவியிலிருந்து நீககப்பட்டதைத் தொடர்ந்து இந்த இடைத் தேர்தல் நடைபெற்றது.

முன்னைய அரசாங்கத்தால் ... கூறினர்.

# இந்தப் பரீட்சை முடிவும் தாமதமாவது ஏன்?

வெள்ளவத்தை, வியா

இவ்வருடம் மே மாதம் நடைபெற்ற ஐக்கிய சுங்கச் சேவை உத்தியோகத்தர்கள் பதவிக்கான பரீட்சையின் முடிவுகள் இன்னும் மர்மமாகவே வைக்கப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கும் அதிகளவு தமிழ் மாணவர்களே தோற்றிச் சித்தியடைந்திருப்பதால் பொறியியல் பகுதி பரீட்சை முடிவுகள் போன்று இதுவும் பிரச்சனைக்குள்ளாகலாம் என்று பரீட்சார்த்திகள் ஐயம் தெரிவிக்கின்றனர், இப்பரீட்சை முடிவுகள் ஏன்

(4 ம் பக்கம் பார்க்க)

## காலி அசைஸ் நீதிமன்ற விசாரணை

# கொலை வழக்கில் 4 பேருக்குத் தூக்கு!

காலி, வியாழன்

காலி அசைஸ் நீதிமன்ற விசாரணையின் போது நேற்று நீதிபதி திரு. ஏ சில்வா சே. டபிள்யு. தயாரத்ன, டபிள்யு பியேறிஸ் எம். பியதாஸ், ஜி. டிநோறிஸ் ஆகிய நால்வருக்கும் மரணதண்டனை விதித்துள்ளார்

மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த மேற்படி நான்கு பேரும் தங்கள் கிராமத்தைச் சேர்ந்த முனசிங்கா ஆராச்சி மாட்டின் அலயஸ் என்பவரை 1968-ம் ஆண்டு செப்டம்பரில் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டே மரணதண்டனை விதிக்கப்பட்டனர்.

இவ்வழக்கு விசாரணை கடந்த 5 தினங்களாகத் தொடர்ந்து நடைபெற்றது. கொலை செய்யப்பட்டவர் குற்றவாளிகளில் ஒருவரின் நெருங்கிய உறவினர் ஒருவரைக் கொலை செய்ய முயற்சித்ததாக 4 வருடம் சிறைத்தண்டனை அனுபவித்தவர் எனவும் அவர் சிறை சென்று திரும்பிய பின்னர் அவரை மேற்குறிப்பிட்ட நால்வரும் கொலை செய்தனர் என விசாரணையின்போது தெரியவந்தது.

மரணதண்டனை விதிக்கப்பட்ட நால்வரும் தங்கள் தீர்ப்பை வதிர்த்து அப்பீல் செய்துள்ளனர்.



## புதிய ஜே. பி.

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண மாநகரசபையின் 19-ம் வட்டார உறுப்பினரான ஜனாப் எம்,ஏ, சி. எஸ். ஏ. காதர் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு சமாதான நீதிபதியாக நியமனம் பெற்றுள்ளார். அவர் இன்று நீதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொள்கிறார்.

இவர் சென்ற யாழ். மாநகரசபைத் தேர்தலில் போட்டியின்றி 19-ம் வட்டாரப் பிரதிநிதியாக தெரிவுசெய்யப்பட்டவர். சோனகதெரு உபதபால்நிலைய அதிபராக கடமையாற்றும்இவர், அகில இலங்கை தமிழ்பேசும் உபதபால்நிலைய அதிபர்களின் சங்கத்திற்கு போஷகராகவும், யாழ்.முஸ்லிம் பொது நல சங்கத்திற்கு தலைவராகவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.கிளையின் உப தலைவராகவும், இஸ்லாமிய சோஷலிஸமுன்னணி அங்கத்தவராகவும் இருக்கிறார். பொதுநல சங்கத்திலும் முக்கியமான பங்கெடுத்து சமூகத்தொண்டு செய்துவரும் இவர், காலஞ்சென்றபிரபல வர்த்தகர் எம் எம் எல் முகம்மது அப்துல் காதர் ஹாஜியாரின் புதல்வர். இவர் யாழ்ப்பாணம் மஸ்றஉத்தீன் நிாடசாலையிலும் யாழ்ப்பாணம்பரியோவான்கல்லூரியிலும், கொழும்பு சஹிறாக்கல்லூரியிலும் கல்வி பயின்றார். இவரை மக்கள் 'மெக்சா' என்று செல்லமாக அழைப்பார்கள்.

## வவனியா பலாத்கார வழக்கு

# "கணவன் இல்லாத நாட்களில் குசுமாவதிவீட்டிற்குச்செல்வேன்"

## எதிரி சிறிசேனு சாட்சியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சம்பவம் நடப்பதற்குஒன்றரை வருடகாலத்திற்கு முன்பிருந்து குசுமாவதியுடன் நான் தொடர்பு வைத்திருந்தேன். கணவன் இல்லாத சமயம்நான் அவர் வீட்டிற்கு செல்வதுண்டு சம்பவ தினத்திற்கு 2 தினத்திற்குமுன்னரும் சென்றிருந்தேன், அன்றையதினம் நான் குசுமாவதியைச் சந்தித்தபோது அன்றிரவு கணவன் வீட்டில் இருக்க மாட்டாரென்றும்என்னை வரும்படியும் அழைத்தார். அதனால் அன்றிரவு சுமார் பத்துமணியளவில் அங்கு சென்றேன்.

வவனியா பலாத்காரவழக்கில் சாட்சியமளித்த 20வயதான எதிரி பி. சிறிசேன மேற்கண்டவாறு கூறினார்,

இவ் வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஓ. எல். டி. கிறெஸ்டர் முன்னிலையில் இரண்டாவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

இவ் வழக்கில்68-ம்ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ம் தேதி வவனியாவில் பாவற்குளம் என்ற இடத்தில் குசுமாவதி என்ற பெண்ணை பலாத்காரம் செய்ததாக சிறிசேன என்ற வாலிபர்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிக்காக அரசாங்கத்தால் அட்வகேட் வி. ஜெகசோதி நியமிக்கப்பட்டிருந்தார்,

### எதிரி சாட்சியம்

எதிரி சிறிசேன சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது சம்பவம் நடந்த தினம் ஞாபகமிருக்கிறது. குசுமாவதியை எனக்கு தெரியும், கணவன்வீட்டிலில்லாத சமயங்களில் நான் அங்கு போவதுண்டு, சம்பவம் நடந்ததினம் நான்சென்றபோது குசுமாவதி நித்திரையாக இருந்தார். நான் அவரை மிகவும் மெல்லிய குரலில் குசுமாவதி,சுமாவதி எனக் கூப்பிட்டேன். அவர் எழுந்திருக்கவில்லை, கதவின் ஊடாக சிறு வழியிருந்தது. அதன் மூலம் ஒரு தடியை எறிந்தேன் அவர் எழும்பினார்.

### கதவைத்திறந்தார்

குசுமாவதி எழுந்து கதவைத்திறந்தார். என்னை உள்ளேவரும்படி அழைத்தார். நான் உள்ளே சென்றதும், கதவைச்சாத்தி தடைபோட்டார். லாம்பு எரிந்துகொண்டிருந்தது வெளிச்சம் அவ்வளவுபிரகாசமாகஇல்லை குசுமாவதி வெளிச்சத்தை குறைத்தார் அவருக்கு அருகில் பிள்ளையும், பக்கத்தில் நமலாதாவும்படுத்திருந்தார்கள் வேறு எவரும் வீட்டில் இல்லை.

### கத்தி வைத்திருந்தார்

அவருடன் தொடர்பு வைத்தபின்னர்நான்வீட்டிற்குச்செல்லவிரும்பினேன் குசுமாவதி என்னை காலை 5மணி

(4 ம் பக்கம் பார்க்க)

## சந்நிதியில் கதாப்பிரசங்கம்

நெல்லியடி, வியாழன்

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் சனிக்கிழமை இரவு 7 மணிக்கு அளவெட்டி அருட்கவி க. விஞசித்தம்பி சந்நிதிக் கந்தன் என்னும் பொருள் பற்றி கதப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

## தமிழ்நாடு

# புதிய அமைச்சர் எவரும் மந்திரிசபையில் இல்லை

சென்னை, செப். 10

தமிழ்நாடு அமைச்சரவையிலிருந்து ராஜினமாச் செய்த மூன்று அமைச்சர்களுக்கும் பதில் புதிதாக எவரும் இப்போதைக்கு நியமிக்கப்பட மாட்டார்கள். இந்த மூவரினால் கவனித்து வந்த பணிகள் எஞ்சியுள்ள அமைச்சர்களுக்கிடையில் பகிர்ந் தளிக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சின் பொறுப்புக்களை முதல்வர் திரு. கருணாநிதியே மேற்கொண்டுள்ளார்.



வேழவேந்தன் கீழ் இருந்த அமைச் சுபிற்பட்டோர் நல அமைச்சர் நடராசனிடமும் முத்துசாமி வகித்துவந்த அமைச்சை உள்ளூராட்சி நகரசபை நிர்வாக அமைச்சர் திரு ப. உ. சண்முகத்திடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மூன்று அமைச்சர்களின் ராஜினமாவின் காரணமாக கட்சியில் ஒற்றுமை குலைந்து விடவில்லையென்று திரு கருணாநிதி கூறினர். கட்சியின் முடிவையொட்டி இந்த மாற்றம் செய்யப்பட்டதாக் அவர் சொன்னர்,


# திருமண அழைப்பு

## பேரம்பலம் — கமலாதேவி

நிகழும் சாதாரண வருஷம் ஆவணி மாதம் 14-9-70 திங்கட்கிழமை இரவு 12 மணி தொடக்கம் 1-30 மணி வரையிலுள்ள சுபநேரத்தில்.

| | |
|---|---|
| எமது புதல்வி<br>திருநிறை செல்வி<br>கமலாதேவி<br>அவர்கட்கும் | எனது புதல்வன்<br>திருநிறை செல்வன்<br>பேரம்பலம்<br>(Junior Asist. Architect P. W. D.)<br>அவர்கட்கும் |

வண்ணார்பண்ணை கிழக்கு கந்தர்மடம் (பழம் றோட்டு) பிள்ளையார் கோவிலில் நடைபெறவிருக்கும் திருமணவைபவத்தில் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் பங்குபற்றி மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

குறிப்பு: தனிப்பட்ட அழைப்பு அனுப்பமுடியாததையிட்டு வருந்துகிறோம்,

ச. அம்பலவாணரும் பாரியாரும், 16 A அம்மன் வீதி. கந்தர்மடம்.

திருமதி கந்தையா தெய்வானைப்பிள்ளை சரம்பொன் கிழக்கு ஊர். 2442


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாரதா நிலைய சமயபாட பரீட்சைமுடிவுகள்

உடுப்பிட்டி, வியா.

பருத்தித்துறை ஸ்ரீசாரதா நிலைய சேவாச்சிரமப் போயாதினப் பாடசாலையால் நடாத்தப்பட்ட சமய பாடப் பரீட்சை முடிவுகள் வருமாறு:-

4-ம் வகுப்பு (முதற்பிரிவு) இ. பராசக்தி தும்பளை சைவப்பிரகாச வித்தியாசாலை; (இரண்டாம் பிரிவு) செ. செல்வமலர், பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தர மகளிர் கல்லூரி; கு. திருக்குமரன், வட இந்து மகளிர் கல்லூரி; (மூன்றும் பிரிவு) கு. சந்திரகௌரி, சைவப்பிரகாச வித்தியாசாலை.

5-ம் வகுப்பு (முதற்பிரிவு) இ. நிலாநேசன், சைவப்பிரகாச வித்தியாசாலை, (இரண்டாம் பிரிவு) சி. சூரியகுமார் சைவப் பிரகாச வித்தியாசாலை, (மூன்றும் பிரிவு) கு. மணிவண்ணன், சைவப்பிரகாச வித்தியாசாலை.

6-ம் வகுப்பு (முதற்பிரிவு) இ. கிருஷ்ணமூர்த்தி, சை. பி. வித்தியாசாலை; (இரண்டாம் பிரிவு) இ. தயாபரன், சை. பி. வித்தியாசாலை, (மூன்றும் பிரிவு, கு. மனோகரன், சை. பி. வித்தியாசாலை.

7-ம் வகுப்பு (முதற்பிரிவு) இ. ஆறுமுகராசா. சைவப்பிரகாச வித்தியாசாலை, (இரண்டாம்பிரிவு) இ. தண்மதி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை, (மூன்றும்பிரிவு) சி. நந்தகுமார், இ. தவேந்திரராசா சைவப்பிரகாச வித்தியாசாலை மாணவர்கள் ப. மகேஸ்வரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி.

8-ம் வகுப்பு (இரண்டாம் பிரிவு) ப, சீதாதேவி பருத்தித்துறை மெ. பெண்பாடசாலை.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 பண்ணிந்தமிழ், 7-45 திரைகானம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 மாணவர்மன்றம்.

இரவு 6-10 பேச்சு, 6-15 வயலினிசை, 6-30 விவசாய நிகழ்ச்சி, 6-45 கண்ணகிவழக்குரை, 7-00 வீணை, 7-15 பாட்டு, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 உரையாடல், 10-00 நேயர் கேட்டவை. 10-30 செய்தித் தொகுப்பு.

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — சௌகார்ஜானகி நாகேஷ்—ஜெயந்தி நடித்த
இரு கோடுகள்

2-வது வெற்றி வாரம்
ராஜா - யாழ்ப்பாணம்
(10-30, 2-30, 6-30, 9-45
பிரேம்நசீர், செம்மீன் ஷீலா, சாரதா, மது மற்றும் பலர் நடித்த
இந்திய ஜனாதிபதியின் ஊர்வசி பரிசுபெற்ற
துலாபாரம்
(மலையாளம்)
(எஸ். ரீ: ஆர். பிலிம்ஸ்)

'ஈழநாடு' விளையாட்டுவிழா

# ரசிப்பாக நடைபெறும் 'செற்-அப்' போட்டிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

பொலிஸ்வாரத்தையொட்டி 'ஈழநாடு' ஆதரவில் நடைபெறும் கரபந்தாட்டப் போட்டிகளில் நேற்று முன்தினம் நடைபெற்ற 'செட்அப்' போட்டிகள் சிறப்புப்பெற்று விளங்கின. இப்போட்டிகளைப் பார்ப்பதற்கு தினமும் ரசிகர்கள் கூட்டம் பெருகிய வண்ணமே இருக்கின்றது. 'ஓவர்கேம்', 'செட்அப்' ஆகிய இருபோட்டிகளும் தற்போது ஆரம்பமாகியதால் ரசிகர்கள் இப்போட்டிகள் தொடங்கி முடியும் வரை போட்டிநடைபெறும் திடலைச்சுற்றி பெரும் திரளாகச் சுற்றியிருந்து ரசித்த வண்ணம் இருந்தார்கள்.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

### மோகனதாஸ் வெற்றி

மோகனதாஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் கலாஜோதி விளையாட்டுக்கழகத்துக்குமிடையில்நடைபெற்ற போட்டியில் மோகனதாஸ் கழகம் 3—1 ஆட்டத்தால் வெற்றிபெற்றது.

மோகனதாஸ் கழகத்துக்கும் நீர்வேலி யுனைட்டெட் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற 'செட்அப்' போட்டியிலும் மோகனதாஸ் 2—1 ஆட்டத்தால் வெற்றிபெற்றது

### நீர்வேலி வெற்றி

நீர்வேலிக் கழகத்துக்கும் கே கே எஸ் டெவலப்பன் போட் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் நீர்வேலிக் கோஷ்டி 2—1 ஆட்டத்தால் வெற்றி பெற்றது.

### கே. கே. எஸ் வெற்றி

கே. கே. எஸ். யுனைட்டட் கோஷ்டிக்கும், நீர்வேலிக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்றமற்றுமொருபோட்டியில் கே கே எஸ் கோஷ்டி 2—1 ஆட்டத்தால் வெற்றி பெற்றது.

யாழ், பொலிஸ் கோஷ்டியும் இராணுவக் கோஷ்டியும் 'செட்அப்' போட்டியில் கலந்துகொள்ள மைதானத்திற்கு வந்தபோதிலும், இந்த இரு கோஷ்டிகளுடனும் மோதுவதற்கிருந்த எதிர்க்கோஷ்டிகள் இரண்டும்மைதானத்துக்குகுறித்த நேரத்துக்கு வராமையினால் பொலிஸ்கோஷ்டியும் இராணுவக் கோஷ்டியும் போட்டிகளில் கலந்துகொள்ளாமலே வெற்றியைத் தட்டிக் கொண்டன. (தே-நி)

## இன்றைய பலன்

ஆவணி மாதம் 26-ம் திகதி (11-9-70)

மேஷம்- தெளிந்த மனம். தெய்வசிந்தை தேடியது கிடைக்கும். அமைதியுடன் ஆனந்தவாழ்வும் உண்டு.

ரிஷபம்- துன்பத்தின் நிழலாட்டம் தொடரும். வரவிலும் தடை உண்டு.

மிதுனம்- காதலருக்கு கனகுஷியான தினம். பெற்றோர்களின் ஆதரவு கிடைக்கும்.

கடகம்- அவசரப்போக்கினால் அதிகாரிகளை பகைத்துக்கொள்ளுவீர்கள். முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்.

சிம்மம்- கட்டி வெல்லம் போல் இனிக்கும் வாழ்க்கை காதலர்கள் எண்ணங்கள் கைகூடும். பொன்னான தினம்.

## யாழ். ரெனிஸ் கோஷ்டி மன்னார் செல்லுகிறது

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண வாமதேவாஸ் ரெனிஸ் விளையாட்டுக் கோஷ்டி இம்மாதம் 14-ம் திகதி மன்னார் செல்லுகின்றது.

அகில இலங்கை ரெனிஸ் கழகத்தின் அனுசரணையின் கீழ் நடைபெறும் இந்தச் சுற்றுப்போட்டியில் மன்னார் பப்ளிக் சேவிஸ் ரெனிஸ் கோஷ்டியுடன் போட்டியிடவே யாழ் வாமதேவாஸ் கோஷ்டி மன்னார் செல்லுகின்றது. இப்போட்டி மன்னாரில் இம்மாதம் 14-ம்திகதி நடைபெறும்.

மன்னார் பப்ளிக் சேவிஷ் சேவிஸ் ரெனிஸ் கோஷ்டிக்கு டாக்டர் கே. துரைசிங்கம் தலைமை தாங்குகின்றார்.

யாழ் வாமதேவாஸ் கோஷ்டிக்கு திரு சி. வாமதேவாஸ் தலைமைதாங்குகின்றார் மற்றும் சி. ரகுநாதன் ஏ ரட்ணவேல் எஸ். குமாரசாமி, ஏ. ஆர். ராஜூபி இந்திரன் ஆகியோரும் இக்கோஷ்டியில் அங்கம் வகிக்கின்றனர். (தே. நி)

—

தெய்வசந்நிதியில்

சுகாதார

## 'பூரண விசாரணை நடத்தவும்'

கோட்டை, வியாழன்

சமீபத்தில் பதுளையிலுள்ள தோட்டமொன்றில் பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தபொழுது இரு தொழிலாளர்கள் இறந்தமையையிட்டுப் பூரணவிசாரணை செய்ய வேண்டுமென ஐக்கியத் தோட்டத் தொழிலாளர் சங்கம் கோரியுள்ளது.

இந்தத் தோட்டத்தில் இரு மாதங்களுக்கு மேலாக வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறுவதாக மேற்படி சங்கத்தலைவர் திரு எஸ். நடேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் இவ்விடயமாக தனது கருத்தைத் தெரிவிக்கையில், இலங்கையில் தோட்டத் தொழிலாளர்கள் மிருகங்களைப்போல் நடாத்தப் படுகிறார்கள். இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பற்றி அரசாங்கம் விசாரணை நடாத்தி சம்பந்தப்பட்டவர்களைத் தண்டிக்கவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

......

மண்வள ஆராய்ச்சி

# "52 ஆசிரியர்களுக்கும் நியமனம் கிடைக்கும்"

## தமிழ்பௌத்தபாடசாலை நிலை பற்றி எம். ஸி. விளக்கம்

உடுப்பிட்டி, வியா.

"வடபகுதியிலுள்ள கரவெட்டி, அல்வாய், அச்சுவேலி, புத்தூர் ஆகிய நான்கு பௌத்த பாடசாலைகளிலும் கடந்த ஐந்து வருடங்களாகச் சம்பளமின்றிப் படிப்பித்துவரும் 52 ஆசிரியர்களுக்கும் அரசாங்க நியமனம் வழங்கப்படும்."

நியமன எம். பி யும், அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவருமான திரு. எம். ஸி. சுப்பிரமணியம் நமது நிருபரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்

தமிழ்ப் பௌத்த பாடசாலைகளின் ஆசிரியர் நியமனத்தில் எந்த ஆசிரியர் மீதும் புறக்கணிப்புக் காட்டப்படவில்லை. பாரபட்சமற்ற முறையில் சகல ஆசிரியர்களுக்கும் நியமனம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றும் அவர் சொன்னார்

தற்போது 36 ஆசிரியர்களுக்கும் விசேட அலவன்ஸ் வழங்கப்பட்டுள்ளதென்றும் அவர்களுக்கு அரசாங்க நியமனம் வழங்கப்படவில்லையென்றும் இதனால் மிகுதி 16 ஆசிரியர்களும் பீதியடையத் தேவையில்லையென்றும் அவர் கூறினார்.

கரவெட்டி ஸ்ரீநாரத தமிழ் பௌத்தபாடசாலையில் நடைபெற்றுவரும் பகிஷ்கரிப்புப் பற்றிக் கல்வியமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன்மஹ்மூத்திற்குக்கடிதமூலம் விளக்கியுள்ளதாகவும், கல்வியமைச்சருடன் இவ்விடயமாக நேரில் பேச்சுவார்த்தை நடாத்தப் போவதாகவும் திரு எம் ஸி சுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

தமிழ்ப் பௌத்த பாடசாலை ஆசிரியர் நியமனத்தில் எவர்மீதும் எத்தகைய பாகுபாடும் காட்டப்படமாட்டாதென்றும் அவர் கூறினார்.

## உப்பு உற்பத்தி அதிகரிக்கும்

ஆனையிறவு, வியாழன்

ஆனையிறவு குறிஞ்சாதீவுப் பகுதி உப்பு உற்பத்தி விஸ்தரிப்புபகுதி பொறுப்பாளரான திரு. எஸ். கனகநாயகம் தனது விஸ்தரிப்பு வேலைகளை வெற்றிகரமாகமுடித்து வருகிறார். பெரும்பாலும் இவ்வருடக்கடைசியில் உப்பு விளைச்சல் கூடுதலாக இப்பகுதியில் எதிர்பார்க்கப்படலாம்.

——

## இ. போ. ச. இடமாற்றங்கள் நிறுத்தப்பட்டன

திருகோணமலை, வியாழன்

திருகோணமலை இ. போ. ச. டிப்போவில் தமிழ் ஊழியர்களுக்கு அனுப்பப்பட்ட

## 'தமிழ்க் கலைகலாசாரத்தை இன்று மக்களே காக்கவேண்டும்'

சுழிபுரம், வியா.

"தமிழ்மக்களாகிய எமது கலைகலாச்சாரம் மிகவும் தொன்மைவாய்ந்தவையாகும். கலை, அக் கலையை வளர்க்கும் கலைஞர்கள் அன்று மூவேந்தர்களால் கௌரவிக்கப்பட்டு போற்றப்பட்டனர். இதனால் உலகநாடுகள் பூராவும் வாழ்ந்து வந்த தமிழர்கள் தமக்கிடையே ஒரு கலைப்பாலத்தை அமைத்து கலையை வளர்த்தனர். இன்று மக்கள் ஆட்சி நடைபெறும் காலம் மன்னர்கள் கொடுத்த ஆதரவை மக்கள் கொடுத்து ஆதரிக்க வேண்டிய நிலையிலுள்ளனர். தமிழ்நாட்டவர்களுடன் உள்ள கலை, பத்திரிகைத் தொடர்பை தடைசெய்யும் நடவடிக்கையில் இன்றைய அரசாங்கம் முனைகிறது. இச் செயல் எமது வளர்ச்சியை தடைசெய்வதாகும். தமிழ்பேசும் மக்கள் ஒவ்வொருவரும் அரசாங்கத்தின் இச் செயலைக் கண்டிக்க வேண்டும் உலகநாடுகள் யாவற்றிலும் இருந்துவரும் பத்திரிகைகளை தடைசெய்யவோ அல்லது கட்டுப்படுத்தவோ முயலாத அரசாங்கம் தமிழ்நாட்டுப் பத்திரிகைகளை மட்டும் ஏன் தடைவிதிக்க நினைக்கவேண்டும்? தரம் குறைவு என்று ஒரு காரணம் கூறப்பட்டாலும் உண்மைவேறாகும்"

இவ்வாறு பண்ணாகம் கலைமன்றத்தினரால் நடாத்தப்பட்ட கலைவிழாவுக்குத் தலைமைவகித்துப் பேசிய திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார். வழக்கம்பரை அண்ணா அரங்கில் நடைபெற்ற விழாவில் திரு. அ. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில், பாலுணர்ச்சியும், குப்பை கூளங்கள் கொண்ட பல

பண்டிதர் ப. இராசகுரு பேசுகையில் கூறியதாவது: தமிழகத்துக்கும் எமக்கும் இருந்துவரும் பல்வகையான இரத்தத் தொடர்பை, அறிவு கலை போன்ற சகலவற்றையும் கட்டிக்காக்கவேண்டும். திரு. தா. மோகனநாவுக்கரசு நன்றியுரை கூறினார். தீர்க்கசுமங்கலி, குற்றமற்றவள் ஆகிய இரு நாடகங்கள் மேடையேற்றப்பட்டன.

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் பதவி வெற்றிடம் நாய்பிடிப்பவர் பதவிகள்

இம்மன்றத்தின் சுகாதாரப் பகுதியில் நாய் பிடிப்பவர்களாகக் கடமை புரிவதற்கு விரும்பும் அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர் 40 வயதுக்குட்பட்டவராகவும் நல்ல தேகாரோக்கியமுள்ளவராகவும் இருத்தல்வேண்டும்.

வேதனம்: பிடித்து நீரில் அமிழ்த்திக் கொல்லப்படும் ஒவ்வொரு நாய்க்கும் ரூபா ஒன்று (ரூபா 1/-) வீதம் வழங்கப்படும். அத்துடன் நாய் பிடிப்பவரே கொல்லப்பட்ட நாய்களை மாநகரசபை உலொறியில் எடுத்துச் சென்று அரியாலையில் உள்ள தோட்டத்தில் கிடங்குவெட்டிப் புதைத்தல் வேண்டும்.

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் அபேட்சகர்கள் தமது பெயர், முகவரி, வயது, அனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மலையாளம்)
(எஸ். ரீ. ஆர். பிலிம்ஸ்)

## யாழ் - வின்சர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

ஜெமினிகணேசன்; ஜெய்சங்கர், ராஜஸ்ரீ, நிர்மலா

நடித்த

# பூவா தலையா



## இன்று முதல்

## வெலிங்டன் யாழ்நகர்

(2-30, 6-30, 9-30)

தாய்க்குலத்தின் பெருமைக்கும் தமிழகத்தின் மாண்புக்கும் உதாரணமாய் வாழ்ந்தவள்

- விஜயா -

அவள் கதை மட்டுமல்ல 'துலாபாரம்' உள்ளத்தை உருக்கும் ஒரு கண்ணீர் காவியம். உணர்ச்சி ஓவியம் ... ... ... வாழ்க்கைப் பாதையில் அவள் சந்தித்தது சாதாரண மேடு பள்ளங்களல்ல!

சமுதாயத்தையே திணற வைத்துக் கொண்டிருக்கும் மாபெரும் பிரச்னைகள் அவை.. அவைகளுக்கு முடிவு தேடினள் ... அவள் எடுத்த முடிவு சரியா? தீர்ப்புக் கூறுங்கள் நீங்கள் ...

ஸ்ரீ விநாயகா சுப்ரீயா கம்பைன்ஸ்



# துலாபாரம்

(தமிழ்)

★ ஏ. வி. எம். ராஜன்

இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா

காஞ்சனா, முத்துராமன், ரி. எஸ். பாலையா, நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாரமணி

டைரக்ஷன்; வின்ஸன்ட்

(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)


போல் இனிக்கும் வாழ்க்கை காதலர்கள் எண்ணங்கள் கைகூடும். பொன்னான தினம்.

கன்னி- அறவழியை நாடுவீர்கள். புண்ணிய யாத்திரையொன்று மேற்கொள்ளுவீர்கள்.

துலாம். பணவருவாயில் நல்ல திருப்பம் ஏற்படும். புத்திரர்களால்பெருமைக்கு இடம் உண்டு.

விருட்சிகம்- வியாபாரத் துறையில் மந்தநிலை காணப்படுகின்றது. உடல்நலத்தைப் பேணிக்கொள்ளவும்.

தனுசு- முன்னேற்றம் தடைப்படும். குறுக்குவழித் தலையீடு குழப்பத்தை ஏற்படுத்தலாம். மனஅடக்கம் நன்று.

மகரம்- மேடைப்பேச்சாளர்கள் இன்று பெரும் புகழ் அடைவர். பொதுவாக வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டு.

கும்பம்- சிந்தனைக் கணைகள் தாக்கும். உடன்பிறந்த சகோதரத்தின் உடல்நிலையும் கவலையைத் தரும்.

மீனம்-வாகனம் செலுத்துவோருக்கு இன்று நன்மதிப்புக் கிடைக்கும். சுபதினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை


## வெஸ்லிசினிமா

மாவிட்டபுரம்
தினசரி 6-30, 9-30
போயா, பிரிப்போயா 2-30
ஜெய் சங்கர் - கே. ஆர். விஜயா
நடித்த
**பஞ்சவர்ணக்கிளி**

## ஸ்ரீகாலிங்கன்

இணுவில்
தினசரி பி. ப. 4-45
7 & 9-45
MIGHTY JOE YOUNG

## REGAL

Jaffna
Daily 4-45, 7 & 9-45 p.m.
Kirk Douglas,
James Mason
in
20,000 LEAGUES UNDER THE SEA

## MANOHARA

Jaffna
Daily 4-45, 7 & 9-45p.m.
Lloyd Bridges,
Joan Blackman
in
DARING GAME
[Color]


செல்வச்சந்நிதியில்

## சுகாதார ஏற்பாடுகள்

வல்வெட்டித்துறை, வியா

தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவிலில் நடைபெற்றுவரும் உற்சவத்தை முன்னிட்டு இவ் வருடம்கூடுதலான பக்தர்கள் கோவிலுக்கு வந்துபோவதால் சுகாதார சம்பந்தப்பட்ட விஷயங்கள் முன்னைய வருடங்களிலும் பார்க்க கூடுதலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் கோவிலில் மேற்குவீதியில்பலகாலமாக போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருந்துவந்த பகுதியை தொண்டமானாறு கிராமமுன்னேற்றச் சங்கத்தினர் சிரமதான மூலமாக வாய்க்கால்களை கழிவுநீர் செல்லத்தக்கதாக கட்டியுள்ளனர் உற்சவ காலம்முடியும்வரை தினமும் அளவையூர் திரு. வினுசித்தம்பி அவர்களின் கதாப்பிரசங்கமும் நடைபெற்று வருகிறது.

## கோரிக்கை

வேலணை, வியா

"17,000 மக்கள் வாழும் புங்குடுதீவுப் பகுதியில் இரண்டு கிராமசேவகர்களே கடமையாற்றி வருகின்றனர். இதனால் மக்கள் சிரமத்துக்குள்ளாவதுடன் கிராமசேவர்கள் சேவை செய்வதில் இன்னல்படவேண்டியுள்ளதால் மேலதிகமாக இன்னொருகிராமசேவகரை இப்பகுதியில் நியமிக்க நடவடிக்கை எடுக்கவும் என்றிவ்வாறு தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரை கோரியுள்ளார். 7, 8, 9, 12-ம் வட்டாரங்களுக்கு ஒரு கிராமசேவகரும், 1, 2, 10, 11-ம் வட்டாரங்களுக்குஒருகிராமசேவகரும் 3,4,5,6-ம் வட்டாரங்களுக்கு ஒரு கிராம சேவகரும் நியமிக்கப்படவேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்.

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தொடர்ந்து பதின்நான்கு வருடங்கள் ஓட்டிசுட்டான் சின்னத்தம்பி வித்தியாசாலையில் தலைமையாசிரியராகப் பணியாற்றிய திரு. பெ. மயில்வாகனம் இம்மாதம் தொடக்கம் கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

(குவிம)

டிக்கவேண்டும் எனக் கு... பிட்டுள்ளார்.

......

## மண்வள ஆராய்ச்சி

சங்கானை, வியா...

மண்வள ஆராய்ச்சிமூலம் உற்பத்தியைப் பெருக்கி ஓர் புரட்சியை உண்டுபண்ண வலிகாமம் மேற்குப்பகுதி விவசாயிகள் முனைந்துள்ளனர். இதன்காரணமாக இப்பகுதியில் உள்ள மண் எடுக்கப்பட்டு பேராதனை மண் ஆய்வு கூடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு அதன் பெறுபேறுகள் கிடைக்கப் பட்டுள்ளது. உவர், சவர் தன்மை உள்ள நிலங்கள் அதற்கேற்ப நவீன பசளைவகைகளை இட்டு உற்பத்தியில் அதிசய திருப்பத்தை காணக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. விவசாய விசாலிப்பு பகுதியினரால் மேற்கொள்ளப்பட்ட இத்திட்டத்தால் வடபகுதியில் தேடுவாரற்றுக் கிடந்த தரவைநிலங்கள் பயன் பெறக்கூடிய வாய்ப்பை பெறும்.

## பீலிக்ஸ் டயஸ் வருகிறாராம்

உடுப்பிட்டி, வியாழன்

எதிர்வரும் 27-ம் திகதி உள்ளூராட்சி உள்நாட்டமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் தபால்தந்தி அமைச்சர் திரு செ. குமாரசூரியரும் கரவெட்டிக்கு விஜயம் செய்யவிருப்பதாகக் கரவெட்டி ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிக்கிளைச் செயலாளர் திரு கே. யோகநாதன் அறிவித்துள்ளார். இரு அமைச்சர்களும் கரவெட்டி மேற்கு, இமையாணன், உடுப்பிட்டிப் பகுதிகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உபகிளைகளைத் திறந்து வைக்கவிருக்கின்றனர்

## மீண்டும் தலைவராகத் தெரிவு

சுழிபுரம், வியாழன்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் தலைவராக மீண்டும் திரு. வி. இராசசுந்தரம்போட்டியின்றித்தெரிவு செய்யப்பட்டார். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலேயே தலைவர்தெரிவு நடைபெற்றது.


**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**


## ... நிறுத்தப்பட்டன

திருகோணமலை, வியாழன்

திருகோணமலை இ. போ. ச. டிப்போவில் தமிழ் ஊழியர்களுக்கு அனுப்பப்பட்ட இடமாற்றங்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன. அவர்களை மீண்டும் திருமலை டிப்போவில் கடமையாற்றுமாறு தந்திமூலம் உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது. இ. போ. ச. தலைவருடன் கொழும்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதன் பேரில் இடமாற்றம் நிறுத்தப்பட்டது. இதையிட்டு ஒரு விசாரணை செய்யுமாறும் திருமலை, மூதூர் பஸ் சேவைகள் சிறந்த முறையில் நடைபெற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுக்கவேண்டுமென்றும் மேலும் வற்புறுத்தியுள்ளார் மூதூர் முதல் எம். பி. ஜனாப் ஏ. எல். ஏ மஜீத்.

பறை அண்ணா அரங்கில் நடைபெற்ற விழாவில் திரு. அ. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில், பாலுணர்ச்சியும், குப்பை கூளங்கள் கொண்ட பல பத்திரிகைகள் எமது நாட்டில் வெளியாகின்றன. இவை எத்தரத்தையுடையன? பாகிஸ்தான், சீனு போன்ற நாடுகளில் இருந்து அரசியல் கருத்துக்கள் நிறைந்த பத்திரிகைகள் இங்கு இறக்குமதிசெய்யப்படுகின்றன. இவற்றுக்கு கட்டுப்பாடு இல்லை. தென் இந்தியாவில் இருந்துவரும் தமிழ்ப் பத்திரிகைக்குத்தான் கட்டுப்பாடா? என்று கேட்டார்.

மேலைநாட்டு திறமைமிக்க கலைகளை எமது நாட்டுக்குக் கொண்டுவந்து சேர்க்க வேண்டும். நல்ல தரமான கலை எனில் போற்றவும் பாராட்டவேண்டும்.

உள்ள தோட்டத்தில் கிடங்குவெட்டிப் புதைத்தல் வேண்டும்.

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் அபேட்சகர்கள் தமது பெயர், முகவரி, வயது, அனுபவம் முதலியவற்றைத் தெரிவித்து எழுத்துமூலமாக யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரிக்கு 19-9-70 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாகத் தமது விண்ணப்பங்களைப் பதிவு அஞ்சல் மூலம் அனுப்புதல்வேண்டும்.

ஏ. ரி சுந்தரம்,
மாநகராட்சிமன்ற
ஆணையாளர்,
யாழ்ப்பாணம்

மாநகராட்சிமன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
4-9-70. 2441





குளிர்மையான,
மெந்தோல் பில்டர் முனை
சிகரெட்டுக்கள். தற்கால நவீன
புகையின்பத்திற்கு
பசுமையுடன் உங்களை
அழைத்துச்செல்வன

# நீடிய குளிர்மையான மறுமலர்ச்சி மெட்டர்ஹோன்

சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரயாணிகளை விடுவிப்பதற்கான

# காலக் கெடுவை நீடிப்பதற்கு கொமாண்டோக்கள் இசைவு

## விமான திசை திருப்பம்பற்றி ஐ. நா. பாதுகாப்பு சபை கவலை

அம்மான், செப் 10

திசை திருப்பிக்கொண்டு போகப்பட்ட விமானங்களில் உள்ள பிரயாணிகளை விடுவிப்பதற்கு அரபுக் கொமாண்டோக்கள் விடுத்திருந்த காலக் கெடுவை நீடிப்பதற்கு அவர்கள் இணங்கியுள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளிலும், இஸ்ரேலிலும் காவலில் வைக்கப்பட்டுள்ள அரபுக் கொமாண்டோ இயக்கங்களைச் சேர்ந்த கொரில்லா வீரர்களை இருபத்துநான்கு மணி நேரத்திற்குள் விடுவிக்காவிட்டால், இந்த விமானங்களையும், அதிலுள்ள பிரயாணிகளுடன் சேர்த்து வெடி வைத்துத் தகர்க்கப் போவதாக அவர்கள் நேற்றுக் காலையில் இறுதி எச்சரிக்கை விடுத்தனர். கொமாண்டோக்களுடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பயனாக கொரில்லாக்கள் தமது கால எல்லையை நீடிக்க இணங்கியுள்ளனர்.

இந்தத் தகவல் ஐரோப்பிய நாடுகள் பலவற்றுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. கொமாண்டோக்களின் காவலுக்குள்ளாகி, ஜோர்டான் பாலைவனம் ஒன்றில் தவித்துக்கொண்டிருக்கும் பிரயாணிகளுக்கு உணவுகள், உடைகள் மற்றும் உதவிப் பொருட்களை இன்று செஞ்சிலுவைச் சங்கம் அனுப்பி

தாக இருந்தது. இந்த விமானத்தைத் திசை திருப்ப, ஒரு பெண்ணும், ஆணும் முயற்சி எடுத்தனர். ஆண் தனது கையில் ஒரு துப்பாக்கியுடனும், பெண் தனது இரு கைகளிலும் எறிகுண்டுகளுடனும் நின்றுகொண்டு விமானத்தைத் திசை திருப்பும்படி விமானச் சிப்பந்திகளைப் பயமுறுத்தினர்கள். விமான அதிகாரி ஒருவர் தமது துப்பாக்கியை எடுத்து அந்த ஆளைச் சுட்டுத்தள்ளினர். பெண்ணைப் பிரயாணிகள் மடக்கிப் பிடித்தார்கள்

இன்னும் ஒரு சுவிஸ் பிரயாணியையும ரி. டபிள்யூ. ஏ. போயிங் விமானம் ஒன்றையும் அரபுக் கொமாண்டோக்கள் திசை திருப்பிக் கொண்டுபோய் ஜோர்டான் பாலைவனத்தில் இறக்கினர்கள்.

ஆம்ஸ்டெர்டாமிலிருந்து நியூயார்க் சென்று கொண்டிருந்த அமெரிக்க போயிங் ஜம்போ ஜெட் விமானம் வழிமறிக்கப்பட்டு கெய்ரோவில் இறங்கி அதிலிருந்து 152 பிரயாணிகளும் 18 ஊழியர்களும் இறங்கிய பிறகு அரபு கொரில்லாக்கள் வெடிகுண்டு வைத்து விமானத்தை தகர்த்து விட்டனர்.

விமானம் தீப்பிடித்து அடியோடு நாசமாயிற்று: எதுவுமே மிஞ்சவில்லை விமானத்தின் உலோகங்களெல்லாம் கருகி ஒரே தீப்பிழம்பாக காட்சி அளித்தது.

6 இளைஞர்களும் ஒரு பெண்ணும் இந்த விமானத்தை வழிமறித்து திசை திருப்பிக்கொண்டு சென்றதாகக் கூறப்படுகிறது. அரபு

யாகும் என்று கூறியது.

ஸ்விட்ஸர்லாந்தில் பாலஸ்தீன இயக்கத்தைச் சேர்ந்த மூன்றுபேரை விடுதலை செய்யவேண்டும் என்று கோரி அந்த விமானம் மறிக்கப்பட்டது.

ஜோர்டானில் இறக்கப்பட்ட ஸ்விஸ், ட்வா விமானங்களை விடுவிக்க பாலஸ்தீன கொரில்லாக்கள் கடுமையான நிபந்தனைகளை விடுவித்துள்ளது; அவற்றைக் கைப்பற்ற முயன்றால் விமானங்களை வெடி வைத்து தகர்க்கப்படும் என்று அவர்கள் அறிவித்துள்ளனர்.

---

### பாதிரியாருக்குப் புதிய தொல்லைகள்

எர்ணாகுளம், செப் 10

நிம்மதியாக இருந்துவந்த புத்தன்புரா பாதிரியாருக்குப் புதிய தொல்லைகள் முளைத்துள்ளனவாம். கேரளப் பெண்கள் விவகாரத்தின் மூலம் புத்தன்புரா பாதிரியார் பிரபலமாகி விட்டார்.

அவர் நிறையப் பணம் வைத்திருப்பதாகக் கேள்விப்பட்டு, நாட்டின் பல பாகங்களிலிருந்து உதவி கோரி ஒவ்வொரு நாளும் கடிதங்கள் வந்தவண்ண மிருக்கின்றனவாம். நிம்மதியாக இருந்த தனக்கு இது பெருந்தொல்லையாகி விட்டது என்று அவரே இன்று நிருபர்களிடம் கூறினர்.

இந்த ஒரு தொல்லை மட்டுமல்ல. வருமானவரிக் காரர்கள், ரகசியப் பொலீஸ் அதி

---

### 'நாட்டின் சீர்கேட்டுக்கு இந்திராவே காரணம்'

#### காமராஜர் கண்டனம்

திருவனந்தபுரம், செப். 10

இன்று நாட்டை சூழ்ந்துள்ள எல்லா விதமான சீர்கேடுகளுக்கும் இந்திராகாந்தியே பொறுப்பாவார். காங்கிரஸ் கட்சி பிளவுபடாமல் பிரதமர் இந்திரா காத்திருக்கலாம். அவர் வேண்டுமென்றே இப்பிளவை ஏற்படுத்தினர். இவருக்கும் இவரது ஆதரவாளர்களுக்கும் சரியான பாடம் மக்கள் புகட்ட வேண்டும் என பழைய காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜர் தெரிவித்தார்.

கேரளத்தில் நடைபெறும் இடைத்தேர்தலில் இரண்டாம் நாள் தேர்தல் பிரசாரம் செய்வதற்காக கேரளம் வந்துள்ள காமராஜர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

பிரதமர் ஜனநாயக கோட்பாடுகளுக்கு முரணான வகையில் நடந்துகொள்கின்றார். எதிலும் அவசரப்பட்டு நடவடிக்கை எடுக்கின்றார். நாட்டிலுள்ள எல்லா அரசியல் சக்திகளையும் பலவீனப்படுத்தி தன் நிலைமையை நிலை நிறுத்தப் பார்க்கிறார் என பிரதமர் இந்திரா காந்திமீது காமராஜர் குற்றம் சாட்டினர்.

---

### இங்கிலாந்தில் பயிற்சி பெற பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, வியாழன்

ரோட்ஸ் உபகார நிதி திட்டத்தின்கீழ் ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலையில் 2 வருட பயிற்சியை மேற்கொள்ளும் பொருட்டு இலங்கையர் ஒருவர் நவம்பர் மாதம் தெரிவுசெய்யப்பட விருக்கிறார். இதுவரை இந்த உபகாரநிதி திட்டத்தின்கீழ் நான்கு இலங்கையர்களுக்கு உபகார நிதிச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உபகார நிதிக்கு திருமணமாகாத சகல பட்டதாரிகளும் விண்ணப்பிக்க[illegible]. விண்ணப்பதாரர்கள் முதலாம் அல்லது இரண்டாம்தர பட்டதாரிப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். 19 வ[illegible] ற்கு உ[illegible] [illegible]ம் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

### காவிரி தண்ணீர் பங்கீடு

சென்னை, செப். 10

காவிரிநீர் பங்கீடு பற்றிய 1924-ம் வருட ஒப்பந்தம் மைசூரை சட்டபூர்வமாகக் கட்டுப்படுத்தாது என்று மைசூர் அரசுக்கு யோசனை கூறப்பட்டுள்ளபோதிலும், அதை மைசூர் அரசு ஒருதலைப்பட்சமாக ரத்து செய்யாது என்று மைசூர் சட்ட மந்திரி பட்டுசாமி சென்னையில் தெரிவித்தார்.

ஒப்பந்தப்படி கி[illegible]ஷ்ண ராஜாசாகர் அணைக்குமேல் பகுதியில் 4500 கோடி கன அடி நீரைத்தேக்க மைசூரை [illegible]திக்கவும் அதே சமயத்தில் தமிழ்நா[illegible]டுக்கு உரிய பங்கு த[illegible]ணீர் கிடைக்கவும் வகை செய்

---

#### மன்னர் மான்ய ஒழிப்பு

## ஜனாதிபதி நடவடிக்கையை எதிர்த்து வழக்குத்தாக்கலாகும்

புதுடில்லி, செப். 10

மன்னர்களின் மான்யத்தையும் அதிகாரத்தையும் ஒழிப்பதற்காக ஜனாதிபதி உத்தரவை எதிர்த்து வழக்குப் போடப்போவதாக பழைய மன்னர் பானுபிரகாஷ்சிங் கருத்துத் தெரிவித்தார். மன்னர்கள் தனித்தனியாகவோ கூட்டாகவோ வழக்குப் போடுவது பற்றி மன்னர்களின் கூட்டம் முடிந்ததும் முடிவு செய்யப்படுமெனவும் கம்யூனிஸ்டுகளின் வலையில் ஆளும்கட்சி விழுந்துவிட்டதுபோலவே தனக்குத் தோன்றுவதாகவும் அவர் தெரிவித்தார்.

பானுபிரகாஷ்சிங் நரசிங்கர் மகாராஜா ஆவர். ஆளும் கட்சியினால் கொண்டுவரப்பட்ட மன்னர் மான்ய ஒழிப்பு மசோதாவை ஆதரித்தமையால் இந்திரா காங்கிரசிலிருந்து நீக்கப்படவர். பழைய சமஸ்தானமன்னர்களின் மான்யத்தை ஒழிப்பதற்குரிய அவசரஉத்தரவை இந்தியஜனாதிபதி திரு வி. வி கிரி பிறப்பித்துள்ளார். இவ்வுத்தரவு உடனடியாக அமுலுக்கு வந்ததும் மன்னர்களுக்கு இதுகாலவரை அளிக்கப்பட்டு வந்த மான்யம் நிறுத்தப்படும்.

மன்னர்களின் மானிய ஒழிப்பு மசோதா டில்லி மேல்சபையில் ஒரு வாக்கினால் தோல்வி அடைந்ததையடுத்தே இவ்வுத்தரவை ஜனாதிபதி பிறப்பித்தார். இதற்கான அதிகாரம் இந்திய அரசியல் திட்டத்தில் ஜனாதிபதிக்கு உண்டு. ஜனாதிபதியின் இந்த உத்தரவை மேல்சபையில நிதிமந்தி திரு சவான் சமர்ப்பித்தார்.

அவர் இந்த மசோதாவை ராஜ்யசபையில் சமர்ப்பித்துப் பேசுகையில் கூறியதாவது:- அரசியல் அமைப்புச் சட்டத்திருத்த மசோதா நிறைவேறியபின்பே ஜனாதிபதியின் இவ்வித அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டுமென்றே அரசாங்கம் விரும்பியது ஆனால் ராஜ்யசபையில் இம்மசோதா ஒருவாக்கால் தோல்வி அடைந்ததினால் இவ்வித நடவடிக்கை எடுக்க வேண்டியேற்பட்டது காலத்துக்கு ஏற்காத முறையில் சமூகத்தின் ஒருபகுதியான இவர்கள் சமூகப் பொறுப்பு எதுவுமில்லாமல் ராஜ்ய மான்யங்களையும் உரிமைகளையும் பெற்று வருவது தவறானதுஎன மக்களிடையே பரவலான அபிப்பிராயம் இருப்பதை அரசாங்கம் கவனத்தில் கொள்ளாமல் இருக்க முடியாது.

மராட்டிய முதல் மந்திரி திரு. வி. பி. நாயக் இம்மசோதாவை வரவேற்ருர்.

### ராஜாஜி கண்டனம்

24-வது திருத்த மசோதா தோல்வியுற்றபின் அரசியல் சட்டத்தின் 366 (22)வது சரத்தின் கீழ் ஜனாதிபதி பிறப்பிக்கும் உத்தரவின் கீழ் முன்னாள் சமஸ்தான மன்னர்களின் மான்யத்தையும் சலுகைகளையும் ஒழிப்பதென்பது அத்சியல் சட்டத்தையே மீறுவதாகும் ஜனாதிபதிதான் செய்த சத்தியப் பிரமானத்திற்குமாருக நடப்பது சரியல்ல என்றுசமஸ்தான மன்ன்ர்களின் மான்ய ஒழிப்பு உத்தரவைக் குறிப்பிட்டு, ராஜாஜி கருத்துத் தெரிவித்தார். ஒரிஸ்ஸா முதல்மந்திரி ஆர். என். சிங்தேவ், சின்டிக்கேட் காங்கிரஸ் தலைவர் நிஜலிங்கப்பா பிரஜாசோஷலிஸ்ட்பொதுச் செயலாளர் பிரம்பாஸின் ஆகியோர் இவ்வுத்தரவு ஜனநாயகத்திற்கு விரோதமானதெனக் கூறியுள்ளனர்.

### மக்கள் கருத்தை அறிய வேண்டும்

புதுடில்லி, செப் 10

பழைய மன்னர்களின் ராஜ மான்யத்தை ரத்துச் செய்யும்விஷயமாக பாராளுமன்றத்தைக் கலைத்து மக்கள் தீர்ப்பை அறிவதுதான் சிறந்த செயலாகுமென பிரஜா சோஷலிஸ் தலைவர் ஸ்ரீசமர் குஹா கூறினர். மன்னர்களின் ராஜ்ய மானிய ஒழிப்பு உத்தரவை குறிப்பிட்டே மேற்கண்டவாறு அவர் கூறினர்.

அரசாங்கத்தின்இச்செயல் சட்ட விரோதமானது மட்டுமல்ல, ஜனநாயகத்திற்கும் முரணானது என கிருமகி

### மன்னர்கள் அனுபவித்த சலுகைகளும் வசதிகளும்

புதுடில்லி, செப். 10

இந்தியா சுதந்திரமடைந்தபின் பழைய சமஸ்தான மன்னர்களுக்கு பல சலுகைகளை இந்திய அரசு அளித்து வந்துள்ளது. மைசூர், பிஜாப்பூர் போன்ற சமஸ்தான மன்னர்கள் உயர்ந்த நிலையில் இருந்தனர்.

இந்தியாவில் 320 மன்னர்கள் இருக்கிறார்கள். இந்திய அரசின் மன்னர்களின் மானிய ஒழிப்பு மசோதா வருவதற்கு முன் அவர்கள் சுதந்திர இந்தியாவில்பலஉரிமைகளைப் பெற்றிருந்தனர். சமஸ்தான மன்னர்கள்மீது இந்திய அரசின் அனுமதி இன்றி யாரும் வழக்குப் போடமுடியாது. நில உச்ச வரம்புச் சட்டம் இவர்களைப்பாதிக்காது எவ்வளவு நிலமும் வைத்திருக்கலாம் தங்களுக்குரிய சொத்து, வருமான வரிகள் கட்ட வேண்டியதில்லை, மன்னர்கள் பிறமா நிலங்களுக்குச் செல்லும்பொழுது பீரங்கிக் குண்டுகள் முழங்க வரவேற்பளிக்கவேண்டும். மன்னர் போல மன்னர்களின் கார்கள் பதிவுசெய்யப்படவேண்டியதில்லை. இவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு வருடந்தோறும் அந்நியச் செலாவணி அனுமதிக்கப் பட்டது. இவற்றைவிட வருடந்தோறும் மானியமும் இவர்களுககு அளிக்கப் பட்டு வந்தது.

---

### "மக்கள்தான் காக்கவேண்டும்"

வெள்ளவத்தை, வியாழன்

"பண்டைக்காலத்தில் மன்னர்களும் பணம்படைத்த பிரபுக்களும் ஆலயங்களைக் கட்டுவித்துச் சைவத் திருப்பணி செய்து வந்தார்கள். இன்றுகாலம் மாறிவிட்டது. மக்கள்தான் தங்கள் மதத்தையும் மொழியையும் வளர்க்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறார்கள் வேலணை பள்ளம்புலம் முருகமூர்த்தி கோயில் திருப்பணிச் சபையினரின் தொண்டுகள் பாராட்டுக்குரியன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

... ஜோர்டான் பாலைவனம் ஒன்றில் தவித்துக்கொண்டிருக்கும் பிரயாணிகளுக்கு உணவுகள், உடைகள் மற்றும் உதவிப் பொருட்களை இன்று செஞ்சிலுவைச் சங்கம் அனுப்பி வைக்க இருக்கிறது.

### பாதுகாப்புச் சபை கவலை

விமானங்கள் துப்பாக்கி முனையில் திசை திருப்பிக்கொண்டு போகப்பட்டிருப்பது குறித்து. ஐ. நா. பாதுகாப்புச்சபை கவலை தெரிவித்திருக்கிறது. பாதுகாப்புச்சபை, இந்தச் சம்பவங்கள் குறித்துக் கவலை தெரிவித்து நிறைவேற்றிய தீர்மானத்தில் இம்மாதிரி விமானங்கள் திசை திருப்பிக்கொண்டு போகப்படும் சம்பவங்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகள் எடுக்கும்படி உலக நாடுகளைக் கேட்டுக்கொண்டது. இந்தத் தீர்மானத்தின்மீது விவாதம் எதுவும் நடைபெறுவதை எந்த நாடும் விரும்பியதாகத் தெரியவில்லை. அமெரிக்காவும், பிரிட்டனும் கேட்டுக்கொண்டதின்பேரில் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டதாகத் தெரிகின்றது.

ஜோர்டான் பாலைவனத்தில் சிறைவைக்கப்பட்டுள்ள மேற்கு ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து போன்ற நாடுகளைச் சேர்ந்த பிரயாணிகளை விடுவிப்பதாயின் சம்பந்தப்பட்ட நாடுகளில் சிறைவைக்கப்பட்டுள்ள அரபுக் கொமாண்டோக்களை விடுவிக்கும்படி கொமாண்டோக்கள் கேட்டிருக்கின்றனர். இந்தக் கோரிக்கைக்கு மேற்கு ஜெர்மனும், சுவிட்சர்லாந்தும் இணங்கியுள்ளன. இங்கிலாந்தில் விமானமொன்றைத் திசை திருப்புவதற்கு முயற்சிசெய்து பிடிபட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள அரபுக் கொமாண்டோ இயக்கத்தைச் சேர்ந்த இளம் பெண்ணை பிரிட்டிஷ் அரசாங்கம் விடுவித்தால் மாத்திரமே மேற்கு ஜெர்மன், சுவிட்சர்லாந்து அரசுகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தமுடியும் என்று கொமாண்டோக்கள் அறிவித்துள்ளனர்.

### நடந்தது இதுதான்

கடந்த 6ந் திகதி நான்கு விமானங்கள் மேற்கு ஐரோப்பாவில் திசை திருப்பப்பட்டன. இந்த நான்கு சம்பவங்களும் மேற்காசிய நிலைமைகளுடன் சம்பந்தமானவை என்று கருதப்பட்டது.

இதில் ஆம்ஸ்டர்டோமில் இருந்து நியுயோர்க் புறப்பட்ட விமானமொன்றைத் திசை திருப்ப எடுக்கப்பட்ட முயற்சி பரபரப்பு மிக்க ...

... காட்சி அளித்தது.

6 இளைஞர்களும் ஒரு பெண்ணும் இந்த விமானத்தை வழிமறித்து திசை திருப்பிக்கொண்டு சென்றதாகக் கூறப்படுகிறது. அரபு கொரில்லாக்களால் மறிக்கப்பட்ட 4 விமானங்களில் இது ஒன்றுதான் பெய்ரூட்டில் ராட்சஸ ஜம்போ விமானங்களை இறக்கவேண்டிய வசதி இல்லை என்று அதிகாரிகள் எச்சரித்ததையும் பொருட்படுத்தாது பான் அமெரிக்க ஏர்வேஸ் கம்பெனியைச் சேர்ந்த இந்த விமானம் முதலில் பெய்ரூட்டில் இறக்கப்பட்டது. பின்னர் கெய்ரோ கொண்டுவரப்பட்டது.

நியூயார்க்கிற்கு 143 பிரயாணிகளுடன் சென்றுகொண்டிருந்த ஸ்விஸ் விமானமொன்றும் 145 பேருடன் சென்றுகொண்டிருந்த டுவா போயிங் விமானமொன்றும் மறிக்கப்பட்டு ஜோர்டானில் நிர்ப்பந்தமாக இறக்கப்பட்டது.

இந்த நான்கு விமான மறிப்புகளையும் தானே நடத்தியதாக பாலஸ்தீன் விடுதலைக்கான முன்னணி கூறியது.

"நம்முடைய முதல் எதிரியான அமெரிக்காவை" நோக்கமாகக் கொண்டு இந்த விமானக் கைப்பற்றல்கள் நடந்ததாகக் கூறியது. பாலஸ்தீன' மக்களின் உரிமைகளை ஒடுக்குதைற்கான சதிக்கு இது பதிலடி.

### பிரிட்டிஷ் பிரதமர் பங்குபற்றுவார்

லண்டன், செப். 10

பிரிட்டிஷ் பிரதமர் திரு எட்வேர்ட் ஹீத், அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் ஐ நா. சபையின் வெள்ளி விழாவில் கலந்துகொள்வார்.

அக்டோபர் 20ந் திகதி நியூயோர்க் செல்லும் அவர் 25ந் திகதி தாயகம் திரும்புவார். பிரிட்டிஷ் வெளிவிவகார சாம்ராஜ்ய அமைச்சர் சேர். அலெக டக்ளஸ் ஹியூமும் பிரதமருடன் கூடச்செல்வார்.

திரு. ஹீத் அக்டோபர் 23ந் திகதி ஐ. நா பொதுச் சபையில் உரை நிகழ்த்துவார். பிரதமர்ப் பதவி ஏற்ற பின்னர் இதுவே முதல் தடவையாக அவர் வெளிநாடு ஒன்றில் உரை நிகழ்த்துவார். இவ்வுரையில் பிரிட்டனின் வெளிநாட்டுக் கொள்கைகளை அவர் விளக்கவிருக்கிறார்.

ஜனாதிபதி நிக்சனையும் சந்தித்து அவர் பேச்சுக்களை நடத்துவார் என எதிர்பார்க்கப் படுகிறது.

... ந்த தனக்கு இது பெருந் தொல்லையாகி விட்டது என்று அவரே இன்று நிருபர்களிடம் கூறினார்.

இந்த ஒரு தொல்லை மட்டுமல்ல. வருமானவரிக் காரர்கள், ரகசியப் பொலீஸ் அதிகாரிகள் ஆகியோரும் அவரை விரட்டிக் கொண்டிருக்கிறார்களாம்.

இதைத்தவிர ரோம், சைகோன், பிரிட்டன் ஆகிய பல நாடுகளிலிருந்தும் நிருபர்கள் வந்து ஏதாவது கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று புத்தன் புரா பாதிரியார் கூறினார்.

---

### கட்டைவேலி வட்டாரத் தேர்தல்

உடுப்பிட்டி, புலோலி வியாழன்

வாக்களிப்பு நிலையப் பிரச்னை காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்த கட்டைவேலிக் கிராமசபையின் 7-ம் வட்டாரத்திற்கான (வட்டுவத்தைப் பகுதி) தேர்தல் நேற்று அமைதியான முறையில் நடைபெற்றது.

திரு. கதிர்காமு மாணிக்கம் 203 மேலதிக வாக்குகளால்வெற்றி பெற்றுள்ளார்.

முதலாம் அல்லது இரண்டாம்தர பட்டதாரிப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். 19 வயதிலிருந்து 25 வயதிற்கு உற்பட்டவர்கள் அனைவரும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரர்களை தெரிவு செய்யும் கமிட்டியில் டாக்டர் ஜி. பி. மலலசேகரா, பேராசிரியர் குணசேகரா, பேராசிரியர் குணவர்த்தனு, பேராசிரியர் எம். எஸ் தம்பையா. திரு என். எம். கப்பாகொட, திரு. அதுலத்முதலி பிரிட்டிஷ்கவுன்சில் பிரதிநிதி திரு ரி. எச். தோமஸ் ஆகியோர் அங்கத்துவம் வகிப்பார்கள். கொள்ளுப்பிட்டியிலுள்ள பிரிட்டிஷ்கவுன்சிலிடமிருந்து இந்த உபகாரநிதி திட்டம் சம்பந்தமான சகல விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

### 16,000 பேர் விலக்கப்படுவர்

நியூயோர்க், செப். 10

தாய்லாந்திலிருந்து 16 ஆயிரம் படைகளை விலக்கிக் கொள்வதற்கு அமெரிக்கா முடிவு செய்திருக்கின்றது. தென்வியட்னுமிலிருந்தும் 2500 படைகளை விலக்கிக்கொள்ள அமெரிக்கா முடிவுசெய்திருக்கின்றது.

... ஒப்பந்தப்படி ... ராஜாசாகர் அணைக்குமேல் பகுதியில் 4500 கோடி கன அடி நீரைத்தேக்க மைசூரை அனுமதிக்கவும் அதே சமயத்தில் தமிழ்நாட்டுக்கு உரிய பங்கு தண்ணீர் கிடைக்கவும் வகை செய்கின்ற ஒரு ஏற்பாடு செய்யப்படவேண்டும். தமிழ்நாட்டின் உரிய பங்கை நாங்கள் பறிக்கவில்லை. மிஞ்சிப்போனுல் தற்போது கிடைக்கின்ற அளவுக்கும் கூடுதலாக தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் கிடைக்காமல் போகலாம் என்றுர் பட்டுசாமி.

---

### 'தந்தி'யின் ஆமைவேகம்

வேலணை, வியாழன்

வேலணையிலுள்ள ஒருவருக்கு யாழ்ப்பாண விலாசத்துக்கு பண்டாரவளையிலிருந்துதந்தி ஒன்று அனுப்பப்பட்டது. அதில் பண்டாரவளையிலிருந்து யாழ்ப்பாணம் வருவதாகவும் தம்மை புகையிரத நிலையத்தில் சந்திக்கும் படியும்கோரப்பட்டிருந்தது.

தந்திஅனுப்பியவர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து ஒருநாள் சென்ற பின்புதான் தந்திகிடைத்ததாம்.

... ர்களின் ராஜ்ய மானிய ஒழிப்பு உத்தரவை குறிப்பிட்டே மேற்கண்டவாறு அவர் கூறினார்.

அரசாங்கத்தின்இச்செயல் சட்ட விரோதமானது மட்டுமல்ல, ஜனநாயகத்திற்கும் முரணானது என திருமதி தாரகேசுவரி சின்ஹா எம். பி. கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் அரசாங்கத்தின் இம்முடிவு பெரும் அதிர்ச்சியானது. பார்லிமெண்ட் செய்த முடிவுக்குமாருக நடந்துகொள்வதுமிகவும் பாரதூரமானது நாடு சர்வாதிகார ஆட்சியை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது என்பதையே இச்செயல் காட்டுகிறது. நாட்டின் அரசியல் அமைப்புக்கு இதேகதிதான் ஏற்படக்கூடும். ஜெர்மன் அரசியல் திட்டத்தை தகர்த்துதான் சர்வாதிகாரியாக வருவதற்குக் ஹிட்லரும் இதே வழியைத் தான் பின்பற்றினுர் ஆகையால் மக்கள் கவனமாக இருக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்

சம்யுக்த சோஷலிஸ்கட்சி அங்கத்தவர் குணனந்த தாகூர் அரசாங்கத்தின் முடிவைவரவேற்றுர். ராஜ்ய சபையை ஒழித்து விடும் காலம் வந்துவிட்டதா என்பதை அறிவதற்கும் காலம் வந்துவிட்டது என்றுர்.

... நிலமும் வைத்திருக்கலாம் தங்களுக்குரிய சொத்து, வருமான வரிகள் கட்ட வேண்டியதில்லை. மன்னர்கள் பிறமாநிலங்களுக்குச் செல்லும்பொழுது பீரங்கிக் குண்டுகள் முழங்க வரவேற்பளிக்கவேண்டும், மன்னர்கள் மரணம் அடைந்தால் அரசாங்க மரியாதையுடன் அடக்கம் செய்யப்படவேண்டும். எந்தக் காடுகளிலும் வேட்டையாடவும் மீன்பிடிக்கவும் மன்னர்களுக்கு உரிமையுண்டு. மன்னர்களின் கார்களிலும் வீடுகளிலும் தனிக்கொடி ஏறக்கவிடலாம். தங்கள் கார்களுக்குத் தனி இலக்கம் வைத்துக்கொள்ளலாம். பொதுமக்களுடைய கார்கள் பதிவு செய்யப்படுவது ...

---

### இன்று பாரதி விழா

சுழிபுரம், வெள்ளி

வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை இரவு ஏழு மணியளவில் பாரதி விழா கொண்டாடப்படவுள்ளது பாரதி பாடல்களை வழக்கம்பரை சனசமுக நிலைய மாணவிகள் பாடுவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த திரு. என். சிவசண்முகமூர்த்தியின் சிறப்புச் சொற்பொழிவும் இடம் பெறும்.

... டது. மக்களிடம் தங்கள் மதத்தையும் மொழியையும் வளர்க்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிருர்கள் வேலணை பள்ளம்புலம் முருகமூர்த்தி கோயில் திருப்பணிச் சபையினரின்தொண்டுகள் பாராட்டுக்குரியன. இத்திருப்பணிக்கு வேண்டிய பொருளைச் சேர்ப்பதற்கு இத்திருப்பணிச் சபையின் உறுப்பினர்கள் அயராது உழைத்து வருவதை நான் அறிவேன் இம்முயற்சிக்கு அன்பர்கள் பேராதரவு கொடுத்து இத்தெய்வத் தொண்டு சீரிய முறையில் நிறைவெய்த உதவுவார்களாக"

இவ்வாறு ஊர்காவற்றுறைத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற 'போர் முரசு' நாடகத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

வேலணை பள்ளம்புலம் முருகமூர்த்தி ஆலய திருப்பணி நிதிக்காக உதயசூரியன் நாடகமன்றத்தாரின் 'போர்முரசு' நாடகம் அரங்கேற்றப்பட்டது. இவ்வைபவத்திற்கு சமாதான நீதிபதி திரு. இ. சண்முகம்தலைமை வகித்தார்.

'போர்முரசு' சரித்திர நாடகத்தை திரு. என். முத்தையா தயாரித்திருந்தார்: கதை வசனத்தை இராதனவன் எழுதியிருந்தார்.

---

### "போதிய விரிவுரையாளரை நியமியாததேன்?"

யாழ்ப்பாணம், வெள்ளி

கொழும்பு பல்கலைக் கழகத்தின் தமிழ்க் கலைப்பகுதிக்கு போதிய விரிவுரையாளர்கள் நியமிக்கப்படாதது சம்பந்தமாகவும், இப் பல்கலைக் கழக நூல் நிலையத்தில் இருக்கும் தமிழ் நூல்கள் சம்பந்தமாகவும், கல்வி அமைச்சரிடம் கேள்வி கேட்பதற்கு. உடுப்பிட்டி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு கே. ஜெயக்கொடி முன்னறிவித்தல கொடுத்துள்ளார்.

அவர் கல்வி அமைச்சரிடம் பின்வரும் கேள்விகளையும் கேட்க விருக்கிருர்

0 இப் பல்கலைக் கழகத்தில் போதிய விரிவுரையாளர்களை நியமிக்க நடவடிக்கை எமுக்கப்படும்.

0 தமிழ்ப் பகுதிக்கு அவசியமானதென நூல்களின் பட்டியல்கள் விரிவுரையாளர்களால் நூல் நிலையப் பொறுப்பதிகாரியிடம் கொடுக்கப்படும். அந்த நூல்கள் வாங்கப்படவில்லை என்பதை கல்வி அமைச்சர் அறிவாரா- அறிவாராஞல் அந் நூல்களை வாங்க அமைச்சர் நடவடிக்கைஎடுப்பாரா.




# டெற்றோல் கிருமிகளைக் கொன்று உங்கள் குடும்பத்தைப் பாதுகாக்கிறது

ஆபத்தான கிருமிகள், உங்கள் சுற்றுப் புறங்களில் சூழ்ந்திருக்கின்றன. இந்தக் கிருமிகள், உங்கள் உடம்பில் பல வழிகளிலும் நுழைந்து, நோயும், நோய்த் தொற்றும் ஏற்படுத்த முடியும். அக் கிருமிகளிலிருந்தும் பாதுகாப்புப் பெற டெற்றோல் பாவியுங்கள்.



வெட்டுகள், சிராய்ப்புகள், புண்கள், பூச்சிக் கடிகளுக்கு டெற்றோல் பாவியுங்கள். அது கிருமிகளைக் கொன்று சீழ் பிடிப்பதைத் தடுக்கிறது. பிளாஸ்திரி மட்டுமே இடுவதால் ஆபத்தான கிருமிகள் உள்ளே அடைபட்டுச் சீழ்ப்பிடிப்பை உண்டாக்குவன.



டெற்றோலை, குளிக்கும் தண்ணீரிற் சேருங்கள். குளியற் தொட்டியிற் சேர்த்த டெற்றோல், உங்கள் குடும்பத்தை நோய்த் தொற்றிலிருந்து பாதுகாக்கும்.



டெற்றோல், மாதரின் அந்தரங்க சுகாதாரத்துக்கு அதி உகந்தது.

டெற்றோல், தேகத்துக்கேற்ற தொற்று நாசினியெனினும் நோய் நிலவும் வேளைகளில் நோயாளிகளின் துணிகளையும் கழி கூடங்கள், தரைகளையும் நோய்த் தொற்றறச் செய்யவும் அதைப் பாவிக்கலாம். நோய்த் தொற்று பரவுவதை அது தடுத்துவிடும்.




ரெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி.

உலகமெங்குமுள்ள டாக்டர்களும் ஆஸ்பத்திரிகளும் பாவிப்பது டெற்றோல். ஏனெனில் அது சக்தி வாய்ந்த நம்பகமான தொற்று நாசினி என்பதை அவர்கள் அனுபவத்தில் அறிவார்கள்.

P 9126


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

யார் ஒருவர் பிறருக்காக மனவேதனை அடைகிருரோ, அவர்தான் உண்மையான மக்களின் பிரதிநிதி. மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் மட்டும் உண்மையான பிரதிநிதிகளல்ல.

— மகாத்மாகாந்தி,

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna;
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆவணிமாதம் 26-ந் திகதி (11-9-70)

## இந்திராவின் வருகை

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி விரைவில் இலங்கைக்கு வருகைதரவிருக்கிருர். திருமதி இந்திரா இலங்கைக்கு வருவது இதுதான் முதல்தடவையல்ல. ஆனுலும் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர் சம்பந்தமாக இந்திய அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்த திருமதி சிறிமா பண்டாரநாயகா இலங்கையின் பிரதம மந்திரியாகப் பதவிவகிக்கையில், இலங்கை இந்திய ஒப்பந்தத்தை சீராக அமுல்செய்வது குறித்துப் பேச்சு நடத்த திருமதி இந்திராகாந்தி இங்கு வருவது இதுதான் முதல் தடவையாகும் லுசாக்காவில் நடைபெறும் நடுநிலைமை நாடுகளின் மகாநாட்டில் கலந்துகொண்டபின் இலங்கை இந்தியப் பிரதமர்கள் சந்தித்துப் பேசவிருப்பது இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் நட்புறவைப் பலப்படுத்தி நடுநிலைமை நாடுகளுக்குள் நல்லெண்ணமும், நட்புறவும் ஒத்துழைப்பும் ஏற்பட வழிவகுக்க உதவவேண்டும்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் உள்ள கலைகலாச்சாரத்தொடர்புகள் இன்று நேற்று ஏற்பட்டவையல்ல இவை பற்றித் திருப்பித் திருப்பித் சொல்லிக்கொண்டிருப்பதிலும் அர்த்தமில்லை.

ஆனுல் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் ஒரு பிரச்னையாக்கப்பட்டு இன்னமும் அதற்கு ஒரு நல்ல தீர்வு காணப்பட முடியாமலிருக்கிறது. 1964-ம் ஆண்டில் அப்போது இந்தியப் பிரதமராக இருந்த காலஞ்சென்ற திரு. லால் பகதூர் சாஸ்திரியுடன் பேச்சுவார்த்தை நடத்தி இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரான 'நாடற்ற யானங்கள் செய்யப்பட்டு வருவதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

சென்ற சில வாரங்களாகவே இலங்கை - இந்திய ஒப்பந்தம்பற்றியும் அதை அமுல்நடத்துவது பற்றியும் இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனர் தெரிவித்த கருத்துபற்றியும் இலங்கை வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் தெரிவித்த கருத்து பற்றியும் பல்வேறு சர்ச்சைகள் நடைபெறுகின்றன.

"வெறும்வாயைமெல்பவனுக்கு ஒரு பிடி அவல் கிடைத்ததுபோல்" இந்தியாவையும் இந்திய மக்களையும் தமிழ்மொழியையுப்தமிழ்மக்களையும் இழிவாக உரைப்பதும் துவேஷப் பிரசாரம் செய்வதும்தான் தேசாபிமானம் என்ற தவருன அபிப்பிராயத்தை தமது சொந்த நலன் கருதி உருவாக்கி வருபவர்களுக்கு 'இந்த சர்ச்சை நல்ல வாய்ப்பாகக்கிடைத்திருக்கிறது.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையேயிருந்து வரும் கலை, கலாச்சாரத் தொடர்புகள் மேலும் வலுப்பெறவும் இலங்கை-இந்திய நட்புறவும் நல்லுறவும் வலுப்பெறவும் ஆசிய நாடுகளுக்கிடையில் ஒற்றுமையும் சமாதானமும்நிலவவும் அதன்மூலம் ஆசியாவில் மட்டுமல்ல உலகிலேயே சமாதானம் ஏற்படவழிகாணவும் ஆசியாவிலேயே ஜனநாயகஆட்சிமுறை சிறப்புற நடைபெற்றுவரும் இலங்கையினதும் இந்தியாவினதும் பிரதமர்கள் தான் வழிகாட்ட முடியும்.

'நாடற்றவர்' பிரச்னை இருநாடுகளின் நட்புறவுக்கு மட்டுமல்ல ஆசியாவின்ஒற்றுமைக்கும் அமைதிக்கும் வழிகாணக் கூடிய

# தமிழ் மக்களின் பிரச்னைகளில் 'கொழும்புத் தமிழரின்' அக்கறை

தமிழ் மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் நோக்கமாக, கட்சிப் பற்றற்ற கொழும்பு வாசிகளைப் பிரதானமாகவும், இன்னும் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் ஒரு கட்சியோடும், பட்டவர்த்தனமாகத் தெரிவுபடாத சிலரையும் ஒன்று சேர்க்கும் முயற்சியில் மாஜி பேராசிரியர் திரு. நேசையா நடவடிக்கைகள் எடுக்கின்ருர். தனித்த முறையில் ஒருவரையும் தகுதியுடையவர், தகுதியற்றவரென்று விமர்சனம் கூற நான் முன்வரவில்லை.

சேர் பொன். அருணசலம் பெரியாரின் காலம் துவக்கம் இந்தத் துர் அதிர்ஷ்டம் யாழ்ப்பாண மக்களாகிய எங்களைத் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. யாழ்ப்பாணம் என்னும் இந்த வனம் பார்த்த பூமியில் வாழக்கூடிய ஏழை மக்களாகிய நமக்கு அரசியல் குருமார் யாரென்ருல் "மாதம் மும்மாரி பொழிகின்றதா, பெண்களெல்லாம் கற்பாஸ்திரிகளாய் இருக்கிருர்களா" போன்ற கேள்விகளைப் பழைய நாட்களில், அரசர்கள் தங்கள் சபையைக் கூட்டி இடையிடையே விசாரணை செய்வார்களாம். அந்த முறைதான் கொழும்புத் தமிழரின் போக்கு. இந்நாட்டு மக்களைப் பொறுத்தவரையில் இவர்களில் பலருக்குச் சொந்த வீடுகள் யாழ்ப்பாணத்திலுமில்லை, அத்துடன் சொந்தக்காரர் வீடுகளில் இவ்வித மகாநாடுகள் கூடும் நேரத்தில் தானும் போய்த் தங்குவதுமில்லை யாழ்ப்பாண வாடி வீட்டில் தங்கியிருந்து. யாழ்ப்பாணத்தவர்க்குஏற்றஅரசியலமைப்பு என்ன, சமூக ஒழுங்கு என்ன முதலிய விஷயங்களைக் கவனிப்பார்கள் இப்பெரியாருக்கு எங்கள் மக்க

### ஆசிரியருக்குக் கடிதம்

ளின் வாழ்க்கை நிலைமை மற்றும் பிரச்சனைகள் ஒன்றுமே தெரியாது.

மாவிட்டபுரத்தில் நடந்தேறிய, நடந்துகொண்டிருக்கின்ற போராட்டத்திற்குப் பெயர், சமத்துவம் கேட்கும் ஒடுக்கப்பட்ட சமூகத்தைக் கட்டுப்படுத்தும் "சாதிப் போராட்டம்", கோண்டாவில் சந்தியில் ஒரு வாரத்திற்கு முன் கட்டித் தூக்கப்பட்ட தமிழரைக் காட்டிக்கொடுக்கும் குமாரசூரியர் எனும் துரோகி என்ற கேலிச் சிலைக்குப் பெயர் "பாஷைப் போராட்டம்", ஆனுல் உண்மையில் இரண்டும் முகமூடிகள். மாவிட்டபுரச் சம்பவம் "சாதிப்" போராட்டமும் அல்ல, கோண்டாவில் சம்பவம் "பாஷைப" போராட்டமும் அல்ல. பின் அவை யாது?

இடதுசாரி சோஷலிசவாதிகளாகிய நாம் எத்தனையோ ஆண்டுகளாகக் கூறிவரும் வர்க்கப் போராட்டமே இவை இரண்டும். "உள்ளவனுக்கும் இல்லாதவனுக்கும்", "சொத்துச் சுதந்திரமுள்ளவனுக்கும் அதில்லாதவனுக்கும்", "அதிகார பதவியிலுள்ளவர்க்கும் அதற்றவர்க்கும்" மோதல் எத்தனையோ காலமாய்ப் பல நாடுகளில் நடந்துவருகின்றது. யாழ்ப்பாணத்திற்கும் அப்போராட்டம் வந்து சேர்ந்துவிட்டது.

திரு. எம். சி. சுப்பிரமணியம் பாராளுமன்ற உறுப்பினரானது, அரசாங்கம் பாவிபற்றுள்ள நிலபுலன்களை எடுத்து, நிலமற்றவர்களுக்குப் பகிர்ந்துகொடுக்கச் சிந்திப்பது, அரசாங்க வேலையில்லாத சகல மக்களும் உட்பட வயோதிப காலப் பென்ஷன் கொடுக்க ஆலோசிப்பது, ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தை தனிநபர் கையிலிருந்து எடுத்து அரசாங்கம் நடத்த உத்தேசிப்பது இன்னேரன்ன பல விஷயங்களும்; இன்று "வட்டிப் பணத்திலும்" கடைகள் நடத்திக் கொள்ளை இலாபமடித்தும், குத்தகை, வாடகைப் பணத்திலும் தங்கியிருக்கும் வர்க்கத்திற்குச் சொற்பமும் ஏற்கமுடியாத திட்டங்கள் இவ்வரசாங்கம் இவைகளைத் தீட்டி "வியர்வை சிந்தி" அல்லது "மூளையைப் பாவியாது" கால் நீட்டியிருந்து மோட்டார் வாகனங்களில் உல்லாசப் பிரயாணஞ்செய்தும் வாழும் முதலாளி வர்க்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பார்ப்பது மிகமிக ஆத்திரத்தைக் கிளப்புகின்றது. முதலாளிகள் மத்தியில், முக்கியமாய்க் கொழும்புத் தமிழருக்கு அதன் எதிரொலிதான் மாவிட்டபுரச் சம்பவமும், கோண்டாவில் சம்பவமும்!

விசனிக்கவேண்டிய விஷயம் யாதெனில், யாழ்ப்பாண விவசாயிகள், தொழிலாளிகள், பொதுமக்கள் இந்த நிலைமையைக் கிரகிக்கிருர்களில்லை.

கண்மூடித்தனமாய் இன்னும் இருக்காமல் நடைமுறையில் அரசாங்கத்தின் திட்டங்களுக்கு ஆதரவளிப்பதே பொதுமக்களாகிய நாம் செய்யவேண்டிய கடமை.

பொ. நாகலிங்கம்
பட்டினசபை அலுவலகம்,
சுன்னகம்.

# எதியோப்பிய சிறையிலிருந்து இலங்கைபத்திரிகையாளர்விடுதலை

## பிரதம மந்திரி முயற்சி வெற்றி

லூசாக்கா, செப் 10

எதியோப்பியாவில் சிறை வைக்கப்பட்டிருந்த இலங்கைப் பத்திரிகையாளர் திரு. ரணவீரா விடுவிக்கப்பட்டுள்ளார்.

பிரதமமந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் முயற்சியின் பயனுக இவர் விடுதலை செய்யப்படுகிருர்.

பிரதமமந்திரி திருமதி பண்டாரநாயக்கா கூட்டுச்சேரா நாடுகளின் உச்சிமகாநாட்டில் கலந்து கொள்வதற்காக இங்கு வந்து சேர்ந்ததும் எதியோப்பிய தூதுக் குழுவினருடன் திரு. ரணவீராவின் விடுதலை பற்றி ஆ[illegible]சனைகள் நடத்தினுர்.

எதியோப்பிய மன்னர் ஹைலிசெலாஸி சாம்பியாவுக்கு வந்தவுடன் அவருடன் அந்த நாட்டுத் தூதுக் குழுவினர் நமது பிரதமரின் கருத்துக்களை எடுத்துக் கூறினுர்கள். அதன்பேரில் திரு. ரணவீர விடுதலை செய்யப்படுகிருர்.

திரு. ரணவீர விடுதலை செய்யப்படுவதுபற்றிய தகவலை இலங்கைக் குழு[illegible]ம் சாம்பியாவிலுள்ள [illegible]ட்டிஷ் தூதரகம் தெரிவித்தது.

(8-ம் கலத்தொடர்ச்சி)

ஞ[illegible] வாத்தியங்கள் இசைக்கப்பட்டது ஒரேகுழப்பமாக

## இந்தப் ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் தாமதமாக்கப்படுகின்றன என்பதைச் சுங்கப்பகுதி அதிபரிடம் எழுதிக்கேட்குமாறு ஊர்காவற்றுறைப் பிரதிநிதி பண்டிதர்கா பொ. இரத்தினத்திற்கு மாணவர்கள் கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.

இப் பிரச்னைக்கு உடனடித் தீர்வு காணும்படி சகல தமிழ்த் தலைவர்களுக்கும் அவசரக் கடிதங்களை மாணவர்குழு ஒன்று கையொப்பமிட்டு அனுப்பி வைத்துள்ளது.

## கணவன் இல்லாத....

நிழல் நாடகவிழா

## 'அவனைக் கொன்றவள் நீ'

கதை: கதையில் நிகழும் சம்பவங்களும் பின்னல்களும் திருப்பங்களும் நாடகத்தை விறுவிறுப்பாகக் கொண்டு செல்கின்றன. வயிற்றில் இரண்டுமாதச் சிசுவுடன் முதற் காட்சியே ஆரம்பமானது. சிறிது வெறுப்பை ஏற்படுத்தியது. கதையில் நிகழும் சில சம்பவங்களும் இக் கதை ஏதோ ஒரு ஆங்கிலக் கதையின் தழுவலாக இருக்கலாமோ என்னும் சந்தேகத்தைக் கிளப்புகிறது. மிஸ்டர் கணேஷை மிஸிஸ் கணேஷ் 'கைத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்வது தமிழப்பண்பாட்டிற்கும் கலாச்சாரத்திற்கும் ஏற்றதல்ல. இப்படியான சம்பவங்கள் அமெரிக்க ஆங்கில நாடுகளில் அல்லாது இலங்கையில் நடக்கக் கூடியது அல்ல. ஆரம்பத்தில் கதையில் சுவை காணுவிட்டாலும் போகப்போக ரசிக்கக் கூடியதாக விறுவிறுப்பு இருந்தது. வசனங்கள் அவ்வளவு சோடைபோகவில்லை- பிரமாதமாகவுமில்லை.

கலைஞர்கள்: கணேஷாக நடித்த ஏ. ரகுநாதனின் தோற்றம் ஏற்றதாலுலும் வசனங்கள் பேசும்போது பல இடங்களில் சொற்கள் விளக்கக் கூடியதாக இல்லாமையால் சுவை படவில்லை. பேச்சின் தொனி போதவில்லை, நடிப்பில் துடிப்பு இல்லை. முகபாவங்கள், அசைவுகள் சினிமாவை விட மேடைக்குச் சற்று மிதமாகவே இருக்க வேண்டும் என்பதை மறந்து விட்டார் போலும். இன்ஸ்பெக்டர் சோமசுந்தரத்தின் பாத்திரத்தை ஏற்ற கே.ஏ. ஜவாஹர் அனுபவம் மிக்க ஒரு நல்ல நடிகர் என்பதை அவரது அனுயாசமான நடிப்புக் காட்டியது. அவருக்குக் கொடுக்கப்பட்ட பாத்திரம் அவருக்கு ஏற்றதாயில்லை. சில நடிகருக்கு அவரின் தோற்றமும் இயற்கையான அவரின் அங்க அசைவுகளும் அவர் ஏற்றுக்கொண்ட பாத்திரத்தின் தன்மையை கெடுத்து விடுகிறது. இந்த வகையில் திரு ஜவாஹருக்கு இன்ஸ்பெக்டர் பாத்திரம் பொருந்தவில்லை மிகத் தெளிவாக வசனங்களைப் பேசி நன்ருக நடித்தார். அவரின் நடை மற்றும் அங்க சேஷ்டைகள் எல்லாம் ஒரு ஹாஸ்ய பாத்திரம் போல் அவரைக் காட்டின.

சாந்திமதியாக நடித்த செல்வி ஜெயந்தியின் நடிப்பு பிரமாதம். அருமையான லக்ஷ்மியாக வேடந் தாங்கிய செல்வி சித்திராதேவியின் நடிப்பு, வசனப்பேச்சு, முகபாவம், தோற்றம் எல்லாம் நன்ருக அமைந்து பொருத்தமாக இருந்தன. இரண்டேயிரண்டு காட்சிகளில் தோன்றினுலும் ஏற்ற பாத்திரத்தைச் சிறப்பாக நடித்து முடித்தார். இவர் வசனங்கள் பேசும்போது சில சொற்களை உச்சரிக்கும் முறை சுத்தமாக இல்லை. நல்ல எதிர்காலமுண்டு.

தலைவர் தருமலிங்கம்: எம், சண்முகலிங்கம் ஏற்ற இப் பாத்திரம் மிகவும் கவரக் கூடியதாயிருந்தது யாழ்ப்பாணத்தமிழரின் பழக்க வழக்கத்தைப் பிரதிபலித்தது. வெகுஇயற்கையான நடிப்பு வசனங்கள் பேசும்போது ஓரிரு இடங்களில் அளவு மீறிக் "குளறி" விட்டார்.

கரோலிஸ்: இரா. ஜெயச்சந்திரன்ஏற்றஇப்பாத்திரம் மிகவும் சிறியதானுலும் ஒரு குறையுமின்றி நிறைவாக நடித்து முடித்தார். தோற்றமும் நன்ருக இருந்தது பொருத்தமானவர்.

வேலைக்கார ஆண்டியாக நடித்த எஸ். ஏ, அழகேசனின் நடிப்பு வெகுபிரமாதம்அருமையான தோற்றம் இயற்கையான நடிப்பு ஒரு வேலைக்காரனுக்குரிய அடக்க ஒடுக்கம் பணிவு அத்தனையும் நடிப்பில் காணப்பட்டன. இந்நாடகத்தில் சிறந்த நடிகர் தேர்வு ஒன்று நடந்தால்சந்தேகமில்லாமல் பரிசுக்குரியவர் திரு. அழகேசன்தான்.

டைரக்ஷன்: சிறு சம்பவங்களைக் கூட மிகவும் கவனமாகக் கவனிக்கிருர்கள் ரசிகர்கள் என்பதைத் திருசுஹேர்ஹமீட் அறிவது நல்லது தலைவர் தர்மலிங்கம் சாந்தி மதிக்குக் கொண்டு வந்த தோடம்பழங்கள் நிறைந்த கடதாசிப்பைகூட பார்வையாளரின் கவனத்தை ஈர்த்தது என்ருல் அவர்கள் எவ்வளவு நுணுக்கமாக ரசிக்கிருர்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?" அது தோடம்பழப்பை இல்லைபழையதுணியோ கடதாசியோ அடைந்த பை என்று பக்கத்திலிருந்த சிலர் வாய்விட்டுச் சொல்வதைக் கேட்கக் கூடியதாக இருந்தது. அந்தப் பையின்தோற்றமும் அதைத் தூக்கி எடுத்து வைத்த முறையும் அது பழைய கடுதாசி நிறைந்த பை என்பதைக் காட்டிக் கொடுத்து விட்டது திரு கணேஷை திருமதி கணேஷ் சுத்திகொ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டில் அப்போது இந்தியப் பிரதமராக இருந்த காலஞ்சென்ற திரு. லால் பகதூர் சாஸ்திரியுடன் பேச்சுவார்த்தை நடத்தி இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரான 'நாடற்றவர்கள்' பிரச்னைக்கு ஒரு முடிவுகாணும் பொருட்டு அப்போது இலங்கை பிரதமராகவிருந்த திருமதி பண்டாரநாயகா ஓர் ஒப்பந்தமொன்றைச் செய்தார். இந்த ஒப்பந்தத்தை அமுல் நடத்தும் பொருட்டு திருமதி பண்டாரநாயகாவின் பின் ஆட்சிக்கு வந்த திரு. டட்லி சேனநாயகாவின் தலைமையிலான 'தேசிய அரசாங்கம்' ஒப்பந்த அமுல் சட்டத்தையும் நிறைவேற்றியது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஆறு வருடங்களாகியும், ஒப்பந்த அமுல்சட்டம் நிறைவேற்றப்பட்டு சில வருடங்களாகியும் கூட ஒப்பந்தத்தின் சில அம்சங்கள் பற்றியும் ஒப்பந்த அமுல்பற்றியும் இன்னமும் ஒன்றுக்கொன்று முரணாக வியாக்கி[யானம் செய்யப்]பிரதமர்கள் தான் வழிகாட்ட முடியும்.

'நாடற்றவர்' பிரச்னை இருநாடுகளின் நட்புறவுக்கு மட்டுமல்ல ஆசியாவின் ஒற்றுமைக்கும் அமைதிக்கும் வழிகாணக் கூடிய வாய்ப்பைச் சிதறடிக்கக் கூடியதாக அமைந்து விடக்கூடாது.

இந்திய வம்சாவழியினரான 'நாடற்றவர்களும், மனிதர்கள்தான் என்பதைக் கருத்தில் கொண்டு அவர்களுடைய பிரச்னைகளுக்கு மனிதாபிமானத்துடன் தீர்வு காண இருதரப்பினரும் உறுதிகொண்டால் இது ஒன்றும் தீர்க்க முடியாத பெரிய பிரச்னையாகத் தோன்றாது.

லுசாக்காவில் இலங்கை இந்தியத் தூதுக்குழுக்களுகிடையே நடைபெறும் பூர்வாங்க பேச்சுவார்த்தைகள் இலங்கையில் இந்திரா - சிறிமா பேச்சுக்கள் மூலம் நல்ல முடிவைக் கொடுக்குமென்று நம்புவோம்.

# நெல்லியடிப்பட்டினசபைத் தலைவர் ஒருமனதாகத் தெரிவு

உடுப்பிட்டி புலோலி வியாழன்

நெல்லியடிப் பட்டின சபையின் புதிய தலைவராக 6-ம் வட்டார உறுப்பினரும் ஜே. பி. யுமான திரு. சந்தியாப்பிள்ளை பஸ்தியாம்பிள்ளை தேவசகாயம் பரபரப்பான சூழ்நிலையில் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்,

நேற்றுக்காலை கடந்த நான்கு வருடங்களாக விசேட ஆணையாளரின் பரிபாலனத்தின் கீழ் இயங்கி வந்த நெல்லியடிப் பட்டின சபையின் முக்கியத்துவம் வாய்ந்த முதலாவது கூட்டம் ஆரம்பமானது.

புதிய தலைவர் யாரென்பதைத் தெரிந்துகொள்வதற்காகப் பெருந்திரளான மக்கள் பட்டினசபை மண்டபத்தினுள்ளும் வெளியிலும் திரண்டிருந்தனர், முதலாம் வட்டார உறுப்பினர் திரு கே, ஐயாத்துரை உபதலைவராகப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். தலைவர் தெரிவு முடிந்ததும் கடவுள் வணக்கத்துடன் கூட்டம் ஆரம்பமானது. தலைவர் திரு. தேவசகாயம் தனது உரையில் கூறியதாவது:- நாம் கட்சி பேதமின்றி ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். இனிமேல் இப்பட்டினசபை கரடுமுரடாக இருக்காது எனது தலைமையின் கீழ் ரோஜா மெத்தைபோல் திகழும் என உறுதி கூறுகின்றேன். மக்கள் ஆட்சி நிலவும் இச்சமயத்தில் எதுவித இனபாகுபாடின்றி உழைக்க வேண்டும்.

பட்டினசபையை உயர்த்த அவசியமான பணிகளை நிறைவேற்றியேதீருவேன். பொதுமக்களுக்கு எந்தவித இடையூறும் நேராது 7வட்டாரங்களிலும பொதுச் சபையை உண்டாக்கிப் பிரச்னைகளைத் தீர்த்துவைப் போம். பட்டினசபை வளர்ச்சிக்கு வரி வசூலிப்பது இன்றியமையாதது.

முன்னாள் பொலிஸ் அதிகாரியும் 2-ம் வட்டார உறுப்பினருமான திரு. என். பாஸ்கரன் பேசுகையில், 'பல ஆண்டுகளுக்குப் பிறகு இப்பட்டினசபை கூட்டப்பட்டுள்ளது. மக்களுக்கு சேவை செய்யவேண்டும். வட்டாரங்களைச் சீர்ப்படுத்தி நல்லமுறையில் அமைக்க வேண்டும். தண்ணீர், மின்சார, சுகாதார வசதிகள் பூர்த்திசெய்யபடவேண்டும் நெல்லியடியை யாழ்ப்பாணத்தில் 2-வது பெரியபட்டினமாக்க வேண்டும். வட்டாரங்களைத் திருத்தியமைப்பதோடு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒருவட்டாரம் கொடுக்கப்பட வேண்டும்' என்றுகேட்டுக்கொண்டார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

[...]வின் முயற்சியின் பயனாக இவர் விடுதலை செய்யப்படுகிறார்.

பிரதமமந்திரி திருமதி [...]

[...] எதியோப்பிய மன்னர் ஹைலிசெலாஸி சாம்பியாவுக்கு வந்தவுடன் அவருடன் அந்த நாட்டுத் தூதுக்[...]

[...] சாம்பியாவிலுள்ள [...] டிஷ் தூதரகம் தெரிவித்தது.

[...] மிட்டு அனுப்பி வைத்துள்ளது.

(8-ம் கலத்தொடர்ச்சி)

கட்டாரியோ கிறிஸ் கத்தி போன்றதாகவோ இல்லாது சாதாரணமான ஒரு வீட்டுப் பாவிப்புக்குரிய ஆயுதமானால் இன்னும் இயற்கையாக இருந்திருக்கும், இந்தக் கத்தி இவருக்கு எங்கேயிருந்துவந்தது? மடியில் சொருகிக் கொண்டு திரிந்தாரோ என்னும்கேள்விகளுக்கு இடமளித்திருக்காது.

இன்ஸ்பெக்டர் சோமசுந்தரம் முதன் முறையாகக் கணேஷ் வீட்டிற்கு விசாரணைக்காக வரும்சமயம் அவர் ஓர் இன்ஸ்பெக்டர்பொலிஸ் அதிகாரி என்ற அந்தஸ்தும் கௌரவமும் கொடுக்கப்படவில்லை. திருமதி கணேஷ் ஆசனத்தில் அமர்ந்திருந்து கால்மேல் கால் போட்டுத்தான் ஒரு கோடீஸ்வரரின் மனைவி போலவும் இன்ஸ்பெக்டரை ஒரு வேலைக்காரன் போலவும் மதித்து வாக்குமூலம் சொல்லிக்கொண்டிருந்ததும்இன்ஸ்பெக்டர் நின்றநிலையிலே கையில்குறிப்புப்புத்தகத்தை வைத்துக்கொண்டு கேள்விகள் கேட்டு எழுதிக் கொண்டிருந்ததும் வேடிக்கையாக இருந்தது. திருமதி கணேஷ் அவரை ஆசனத்தில் அமரும்படி சொல்லவுமில்லை. அவராக ஓர் ஆசனத்தில் அமரவுமில்லை. சில சந்தர்ப்பங்களில் காதல் காட்சியில் நடிப்பது போன்றிருந்தது. ஏன் மிஸ்டர் கணேஷ்கூடஇன்ஸ்பெக்டரை மதித்ததாகத் தெரியவில்லை கார்ச்சாவியைஇன்ஸ்பெக்டர் கேட்டபோது கணேஷ்தன் காற்சட்டைப் பையிலிருந்து சாவிக்கொத்தைஎடுத்து இன்ஸ்பெக்டரின் மூஞ்சியில் எறிந்தது போல் வீசியதும் 'இந்தக் கேள்விக்கு பதில் சொல்ல நான் தயாராயில்லை' என்று சொன்னதும் 'முதலில்பிணத்தைத்தேடிக் கண்டுபிடியுங்கள்' என்று அதிகாரதோரணையில் சொன்னதும் இன்ஸ்பெக்டரின்மதிப்பைக்குறைப்பதாக இருந்தது. இப்படியான சம்பவங்களை நீக்க திரு. சுஹேர்ஹமீட் கவனம் செலுத்தியிருக்கவேண்டும். திரு. ரகுநாதனின் நடிப்பில் கவனம் செலுத்தப்படவில்லை. அவர்தான் தயாரிப்பாளர் என்றதாலோ என்னவோ! எத்தனை திறமையான நடிகராயிருந்தாலும் எல்லோரையும் கவனித்து நெறிப்படுத்தவேண்டியது டைரக்டரின் கடமை! ஒரே காட்சியில் நடித்துமுடிக்கக் கூடியவகையில் அமைத்தது மிகவும் பாராட்டக்கூடியது

இசையமைப்பு: நாடகத்தில் பாடல்கள் ஒன்றுமில்லை. பின்னணி இசையில் பயங்கரம் ஏக்கம் முதலிய சம்பவங்களு[க்கு] வாத்தியங்கள் இசைக்கப்பட்டது ஒரேகுழப்பமாக இருந்து வசனங்களைக்கேட்க முடியாதபடி திக்குமுக்காடச் செய்துவிட்டது. அந்தச் சமயங்களில் வாத்தியஇசையின் ஓசைகுறைவாகஇருந்திருக்க வேண்டும் அல்லது வாத்தியங்கள் முழங்கும்போது வசனங்களைப் பேசாதுவிட்டு நடிப்பால் உணர்ச்சிகளைக் காட்டி, இசையின் ஓசை குறைந்ததும் வசனங்களைப் பேச ஆரம்பிக்கவேண்டும். இவற்றை இசையமைப்பாளரும் டைரக்டரும் ஒத்துழைத்து ஒத்திகையின்போது கவனித்ததாகத் தெரியவில்லை.

ஒளியமைப்பு:- ஒளியமைப்பில் மிகவும் விசேட ஸ்தானம் வகிப்பவர்கள் எனக் கருதப்படும் கொழும்பு ''பராக்கிரமா'' ஸ்தாபனத்தார் எதையும் பிரமாதமாகச்செய்துவிடவில்லை. எமது உள்ளூர்கலைஞர்கள் அமைக்கும் அளவிற்குக்கூட ஒளி அமையவில்லை. ஏறக்குறைய இருபது 'ஸ்பொட்' லைட்டுகள் கொண்டு அமைக்கப்பட்டிருந்தாலும் மேடையில் முன்பாகத்தை விடப்பின்பாகமே ஒளியில் பிரகாசமாயிருந்ததனால் நடிக நடிகையரின் பாவங்கள் ஐம்பது வீதம் குறைந்தே காணப்பட்டன.

அரங்க அமைப்பு: நிர்வாகத்தில் எவ்விதசிரமமுமில்லை. ஒரே அரங்கில் நாடகம் முடிந்ததால்காட்சி மாற்றங்களில் ஏற்படும் கஷ்டம் அரங்க அமைப்பாளருக்கு இருந்திருக்காது அமைக்கப்பட்டிருந்த 'செட்' நன்றாகவிருந்தது கதவுகளை இன்னும் சிறிது உயரம் கூடியதாகவோ அல்லதுயன்னலின் மேல்மட்ட உயரத்தைக் குறைத்துக் கதவின் மேல் மட்டத்திற்கோ அமைத்திருந்தால் இன்னும் இயற்கையாகவும் கவர்ச்சியாகவும் இருக்கும்,

ஒப்பனை: செப்பமாகவும் இலேசாகவும் செய்யப்பட்டிருந்தது பாத்திரங்களை இயற்கையாகக் காட்டியது. ஒளி மிகவும் குறைவாக இருந்ததால் சிறிது இருளடைந்த முகங்களாகவே காணப்பட்டன. மேடைக்கு அமைக்கப்பட்டிருக்கும் ஒளிக்கும் ஒப்பனைக்கும் மிகவும் நெருக்கமான தொடர்பு இருப்பதால் ஒப்பனைக்கலைஞர்கள் ஒப்பனை செய்வதற்கு முன் மேடையில் அமைத்திருக்கும் ஒளியை முன்னதாகவே கவனித்து ஒப்பனை வேலையில் இறங்கவேண்டும். இந்த நுணுக்கம் ஒப்பனைக்கலைஞருக்குத் தெரிந்திருத்தல் அவசியம்,

[...] பேசி நன்றாக நடித்தார். அவரின் நடை மற்றும் அங்க சேஷ்டைகள் எல்லாம் ஒரு ஹாஸ்ய பாத்திரம் போல் அவரைக் காட்டின.

சாந்திமதியாக நடித்த செல்வி ஜெயந்தியின் நடிப்பு பிரமாதம். அருமையான வசனப்பேச்சு, துடிப்பான, நடிப்பு. நல்ல முகபாவம், ஆனல், 'பாவம்' மேடைக்கேற்ற கவர்ச்சியான தோற்றமில்லை- அது அவர் குற்றமில்லை-நல்ல நடிகை.

[...] தாக இருந்தது. அந்தப் பையின்தோற்றமும் அதைத் தூக்கி எடுத்து வைத்த முறையும் அது பழைய கடுதாசி நிறைந்த பை என்பதைக் காட்டிக் கொடுத்துவிட்டது திரு கணேஷை திருமதி கணேஷ் கத்திகொண்டு தாக்க எத்தனிக்கும் காட்சியில் கத்தி கீழேவிழும் போது அது ஒரு மரக்கட்டையால் செய்யப்பட்ட கத்தி என்பதை அதன் ஓசைகாட்டியது அது ஒரு

(3-ம் கலம் பார்க்க)

# கணவன் இல்லாத....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரை மறித்துவைத்திருந்தார். தன்னைக்கூட்டிச்செல்லும்படி என்னிடம்கூறினர். அவர் ஒரு கத்திவைத்திருந்ததை நான் கவனித்தேன். அவரை கூட்டிச்செல்ல நான் மறுத்தேன், அவர் கத்தியை எடுத்து ஓங்கிவீசும்போது நான் கையைப்பிடித்தேன். வீட்டிற்குள் சுமார் 5 நிமிடம்வரை போராடிக்கொண்டிருந்தோம் அச்சமயம் சில பாத்திரங்கள் உடைந்தன சுவரில்உள்ள கல், தடியினல் எனக்கு காயம் ஏற்பட்டது நான் கதவுத் தடையை எடுத்துவிட்டு ஓட்டம் பிடித்தேன்.

## துவாயைஎடுத்தார்

வீட்டிற்குள் எனக்குப் குசுமாவதிக்கும் சுமார் 30 நிமிடம்வரை சச்சரவு நடந்தது. நான் வீட்டிற்குள் சென்றதும் நான்அணிந்திருந்ததுவாயை குசுமாவதி எடுத்து அறையில் வைத்தார் இரவு 11 மணியிலிருந்து காலை 5மணிவரை அங்கிருந்தேன்.

முடிக்குரிய வழக்கறிஞர் குறுக்குவிசாரணை செய்தபோது குசுமாவதி கூறியதாவது: நான் படுத்திருந்த அறை 8 அடி நீளமும், 10 அடி அகலமும் கொண்டது. நமலாதா சில நாட்களில் இருப்பார். சில நாட்களில் இருப்பதில்லை.

சம்பவத்தின் பின் நான் அநுராதபுரத்திற்குச் சென்றேன். மாமாவுடன் திரும்பி வந்து பொலிஸ் நிலையத்திற்கு சென்றுவாக்குமூலமளித்தேன்.

ஜெயரத்தின சாட்சியமளிக்கையில் கூறியதாவது: எதிரியின் வீடு எனது வீட்டிலிருந்து கால் மைல் தூரத்தில் இருக்கிறது. கணவன் இல்லாத நாட்களில் எதிரி குசுமாவதி வீட்டிற்கு செல்வதைக் கண்டிருக்கிறேன் அவர் குசுமாவதியுடன் கதைப்பதையும் பார்த்திருக்கிறேன் சம்பவம் நடந்த தினம் எதிரி என் வீட்டைக்கடந்து குசுமாவதி வீட்டிற்கு சென்று கொண்டிருந்தார்.

பாவற்குளம் கிராம சேவகர் திரு. ஹரத், சாட்சியமளித்தார் விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

தயாரிப்பு: பாராட்டக்கூடிய நல்ல முயற்சி திருத்தங்கள் செய்யப்படாவிடில் கப்பலேற்றி மலேசியாவிற்கு அனுப்புவது எமது மானத்தைக் கப்பலேற்றுவது போலாகும்.

''கலைக்கண்''

குறிப்பு (இந்த விமரிசனம் நாடகம் நடந்த மறுநாளே பிரசுரிக்கக் கிடைத்தது இடவசதியின்மை காரணமாக வெளியிடப்படவில்லை.)


# புதிய பரத்தயன் ஈ 50

பாவித்து காய்கறி, புகையிலைப் பயிர்களைக் காப்பாற்றுங்கள்!



காய்கறிப் பயிர்களைப் பாதிக்கும் அழுக்கணவன், பனிப்பூச்சி, இலையரிப்புழு, வெண் ஈ, பேன், ஒட்டு உண்ணி, சிற்றுண்ணி, இலையுருட்டிப்புழு, தத்துவெட்டி முதலாம் எல்லாப் பீடைகளையும் கொல்ல வல்ல சர்வபூச்சி நாசினி பரத்தயன் ஈ 50.

புகையிலையையும் மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு, கத்தரி, தக்காளி மற்றும் மரக்கறிப் பயிர்களையும் பாதிக்கும் சகல வித பூச்சி புழுக்களையும் சிக்கனமாக ஒழித்துக்கட்ட மிக்க வன்மையான நாசினி பரத்தயன் ஈ 50.

வைக்க, எடுக்க, வயலுக்குக் கொண்டு போக வர, வசதியான அலுமீனியம் போத்தல்களிற் கிடைக்கும். விலை மிகச் சகாயம்:-

100 சீ.சீ. - ரூ. 4/-
250 சீ.சீ. - ரூ. 9/-
1000 சீ சீ - ரூ. 31/-

சகாய விலையில் கூடிய பயனளிப்பது பரத்தயன்.

இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள் - பரத்தயன் ஈ 50

மூலப் பொருட்களது உற்பத்தியாளர்கள்: பேயர், ஜெர்மனி

BAYER

இலங்கையில் தயாரித்து விநியோகிப்போர் ஹேக்கெம் லிமிட்டெட் 400, யூனியன் வீதி, கொழும்பு 10.